# களத்தில்

எமது மண் நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண். எமது மூதாதையோரின் பாதச் சுவடுகள் பதிந்த மண். எமது பண்பாடும் வரலாறும் வேர் பதிந்து நிற்கும் மண் எமக்கே சொந்தமாக வேண்டும் என்ற குறிக்கோளுக்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

(15.12.1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (175) அன்பளிப்பு 60 p





# தமிழீழத் தனியரசே இறுதியான தீர்வு

★ சிங்களப் பேரினவாதம் மாறப்போவதில்லை ★ இரத்தக்கறை படிந்த வரலாற்றின் கதாநாயகி சந்திரிகா

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



'சிங்களப் பேரினவாதத்தின் கடும்போக்கிலும் தமிழீழ விரோதக் கொள்கையிலும் அடிப்படையான மாற்றங்கள் எதுவும் நிகழும் என நாம் எதிர்பார்க்கவில்லை. எதிர்காலத்தில் இந்த மாற்றம் நிகழாது போனால் தமிழீழத் தனியரசு உதயமாகும் புறநிலையை உருவாக்கித் தந்த வரலாற்றுப் பெருமை சிங்களப் பேரினவாதத்திற்கே சாருமென்பதை நான் திடமாகக் கூறுவேன்' என தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் தமது மாவீரர்நாள் உரையில் பிரகடனம் செய்துள்ளார்.

(உரையின் முழு அடக்கம் 3ம் பக்கத்தில்)

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

பெற்றமனம் கனலாக தமிழர் மனங்களெல்லாம் அனலாக உற்றவர்கள் துடிதுடிக்க தமிழீழ மக்கள் எல்லாம் அஞ்சலித்து எழுந்து நின்று தொழுது ஏற்ற மாவீரர் வித்துடல்கள் உறைகின்ற உறுதியின் உறைவிடமாம் தமிழீழப் புனித மண் மேல் மலர்தூவி ஒளியேற்றி மணிஒலித்து மாவீரர் நாளைத் தமிழீழ மக்கள் தேசிய நாளாக கார்த்திகை 27-ஐ அனுசரித்தனர். புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பின்படி மாவீரர்கள் எண்ணிக்கை 13,233 ஆகும். இந்த பதின் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களும் எங்கள் ஒவ்வொருவரது நல்வாழ்வுக்காகவும் எங்கள் குழந்தைகளின் நல்வாழ்வுக்காகவும் எங்கள் தமிழீழத் தேசத்தின் நல்வாழ்வுக்காகவும் தங்கள் இன்னுயிர்களை ஈந்த மானிடத் தெய்வங்களாக நம் அனைவராலும் பூஜிக்கப்பட்டு வருகின்றனர். வெறும் பூஜனை மட்டும் மாவீரர்களுக்கான வீரவணக்கமாக அமையாது. மாவீரர்கள் விட்டுச் சென்ற பணிகள் தொடர உதவுவதே நாம் அவர்களுக்குச் செய்யக் கூடிய உண்மையான வீரவணக்கமாக அமையும்.

புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்த வரை நாம் செய்ய வேண்டிய முக்கியமான பணியினைத் தமிழீழத் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் தாம் மாவீரர் தினத்தை குறித்து தேச மக்களுக்கு ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறுகின்றார் :-

இன்றைய உலக ஒழுங்கில் ஒவ்வொருநாடும் தமது சொந்த தேசிய அபிலாசைகளிலும், வர்த்தக நலனிலும் அக்கறை கொண்டு செயற்படுகிறது என்பது எமக்குத் தெரியாததல்ல. எனினும் மனித உரிமை, மனித சுதந்திரம், என்ற பொதுமையான விழுமியங்களுக்கு நாகரீக உலகம் முதன்மை கொடுக்கத் தவறவில்லை. இந்த நாகரீக உலகத்திற்கு தலைமை தாங்கும் நாடுகள் சிறிலங்காவில் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்படும் அநாகரீகமான ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பத் தயங்குவது எமக்குத் துயரத்தைத் தருகிறது. எனினும் நாம் மனந் தளர்ந்து போகவில்லை. என்றோ ஒருநாள் தமிழீழத்தின் புதைகுழிகளுக்குள் மூடப்பட்டு உறங்கும் உண்மைகள் வெளிவரத்தான் செய்யும். அச்சிலவேளை சிங்கள பேரினவாதத்தின் முகமூடி கிழியும். அப்போது எமது மக்களின் சோகக் கதை உலகத்தின் இதயத்தை உலுப்பும். அதுவரை, அனைத்துலகம் எங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தும் வகையில், தாயகத்து உண்மை நிலைகளை சர்வதேச சமூகத்திற்கு இடித்துரைத்து வரவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் புலம்பெயர் தமிழர்களின் இந்தப்பணி அதிமுக்கியமானதாக அமைவதற்கு காரணம் சிறிலங்கா தகவலை ஆயுதமாக பயன்படுத்துவதேயாகும். தமிழ் மக்களைப் பற்றிய உண்மையான தகவல்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் தடுக்கப்படுகிறது. அல்லது உருமாற்றப்படுகின்றது. சர்வதேச சட்டங்களுக்கு எதிரான வகையில் தமிழீழ மக்கள் மீது மக்கள் மீதான யுத்தத்தை– பொருளாதார முற்றுகையை – உணவை ஆயுதமாக்குதலை எல்லாம் கூட்டு மொத்தமாக கட்டவிழ்த்து விட்டும் யுத்தக்குற்றச் செயல்களையும் மனிதாபத்திற்கு எதிரான குற்றங்களையும் தாராளமாகச் செய்தும் ஒரு இனஅழிப்பையே தமிழர்களின் அரசியற்பணியைப் பெறுவதற்கான தனது அரசியற் செயற்திட்டமாகச் சந்திரிகா செயற்படுத்தி



## எமது பணி

வருகின்றார். இதனால் தமிழ் மக்களுக்கு தினம் தினம் ஏற்படுத்தப்பட்டு வரும் உயிர் உடல் இழப்புக்களும் சாதாரண வாழ்வுக்கான தடைகளும் இழப்புக்களும் மிகப்பெரிது. இவை வெளியே தெரிய வராத வண்ணம் பத்திரிகைத் தணிக்கைகளும் பத்திரிகையாளர்கள் செய்தியாளர்களுக்கான தடைகளும் சிறிலங்கா அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. பத்திரிகையாளர்களை செய்தியாளர்களை படைகளைக் கொண்டு மிரட்டுதல் கைதாக்கி வெருட்டுதல் போன்றவைகளும் சாதாரணமாக நடைபெறுகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக [illegible] செயலகம் சர்வதேச [illegible] தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் எதிரான உண்மைக்கு மாறான செய்திகள் பிரச்சாரப்படுத்தப்பட்டு அவையே உண்மை போன்று மூளைச் சலவைகள் செய்யப்படுகின்றன. இவற்றுக்கு மேலும் வலுவூட்டவென கைப் பொம்மைகளாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் இலக்ஸ்மன் கதிர்காமரும் தமிழ்க்குழுக்களும் சர்வதேசங்களுக்கும் சந்திரிகாவால் அனுப்பி வைக்கப்பட்டு பிரச்சார மூலாம் பலமாக இடப்பட்டு வருகிறது. இத்தகைய இக்கட்டான சூழலில் தமிழ் மக்களின் தாயகத்து உண்மை நிலைகளை உலகிற்கு உலகின் மனச்சாட்சியை உறுத்தும் வகையில் எடுத்துரைக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்தவர்களாகப் புலம்பெயர் தமிழ் மக்கள் உள்ளனர். இந்தப் பொறுப்பினை செய்வதற்கான அழைப்பாக நம் தேசத்தலைவர் பிரபாகரனின் பேச்சு அமைந்துள்ளது. நமக்காக தம் இன்னுயிர்களையே உயிராயுதமாக கொண்டு நம் தேசத்தை மீள நிறுவும் பணியில் அளப்பரிய தியாகங்களைத் தாங்கி நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முயற்சிகள் விரைவில் செயலுருப்பெறுவதற்கு நாம் செய்ய வேண்டிய பங்களிப்பினைத் தேசியத் தலைவரின் புலம்பெயர் தமிழர்களுக்கான அழைப்பு நம் நெஞ்சிருத்துகின்றது.

மேலும் இன்றைய உலகில் தங்களுடைய தேசிய பாதுகாப்பை தாங்களே நிறுவும் ஆற்றல் உள்ள மக்கள் தொகுதிகளே தேச இனங்கள் என்னும் தகுதியைப் பெற்று தேச அரசுகளை உருவாக்கி நிற்கின்றன. காலனித்துவத்தாலோ அல்லது வேறு வழிகளிலோ தனது தேசிய பாதுகாப்பை வழங்கும் ஆற்றலை இழக்கும் இனங்கள் தமது தாயகங்களிலேயே இரண்டாந்தர அல்லது நாடற்ற மக்களாகி விடுகின்றனர். ஆயினும் இந்த உண்மையை உணர்ந்து அவை தம் வலிமையைப் பெருக்கிக் கொள்ளும் பொழுது அத்தகைய இனங்கள் மீளவும் தேச இனங்களாக தம்மை வெளிப்படுத்தி போராட்டங்களுடாக மீளவும் தம் தேச அரசுகளை அமைக்கப்பாடுபடுகின்றன. இவ்வகையில் தமிழீழ தேசத்தினதும் தமிழீழ மக்களினதும் பிரச்சினைகளை உலகு புரிந்து கொள்வதற்கு நாம் தமிழீழ மக்களுக்கு பலமூட்டல் வேண்டும். இதற்கு நிதியும் மதியும் அளித்திடல் அவசியமாகின்றது.

எனவே போராடும் எம்மவர்க்கு நிதியும் மதியும் அளித்தல், தாயகத்தின் உண்மைநிலைகளை உலகின் மனச்சாட்சியினை உறுத்தக் கூடிய வகையில் எடுத்துக் கூறுதல் ஆகிய இந்த இரண்டு விடயமும் தமிழீழ புலம் பெயர் மக்களாகிய எமது [illegible] வாழ்வின் ஒரு கூறாக மாறினால் நிச்சயமாக எமது தமிழீழத் தேசத்தினதும் எமது உடன்பிறப்புக்களதும் விடுதலை வெகுதூரத்தில் இல்லை. மாவீரர்கள் விட்டுச் சென்ற பணி விரைவில் பூர்த்தியாகி அவர்கள் இலட்சியங்கள் நிறைவேறும். இதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் அர்த்தமுள்ள வீரவணக்கமாக அமையும்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழீழ தேசியத் தலைவர்...

பேச்சுக்களை நடத்தி பிரச்சனையைத் தீர்க்கும் நாகரீகமான நடைமுறையையும் நாம் கைவிடவில்லை. சிங்களத் தலைமையின் நேர்மையில் எமக்கு நம்பிக்கையில்லை என்பதால், சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறோம்? ஆனால் சமாதானப் பேச்சுக்கு அரசு விதிக்கும் முன்நிபந்தனைகள் எதையும் ஏற்பதற்கு நாம் தயாராகவில்லை. அத்தோடு, போர் ஓய்ந்த நிலையில், இராணுவ ஆக்கிரமிப்பும் பொருளாதார நெருக்குவாரங்களும் நீங்கிய இயல்பான சூழ்நிலையில், அரசியற் பேச்சுக்கள் நடைபெறவேண்டுமென நாம் விரும்புகிறோம்.

நாம் பேச்சுக்கு முன் நிபந்தனைகளை விதிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கள் அமைதியான புறநிலையில், நல்லெண்ண சூழ்நிலையில், எமது மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் [illegible]

[illegible] இக்கப்படும்பொழுது, சுதந்திரமாக, சமத்துவமாக பேச்சுக்களை நடத்துவது சாத்தியமில்லை என்பதே எமது நிலைப்பாடு. எனவே, இந்த அழுத்தங்களை நீக்குவது பற்றியும், அரசியற் பேச்சுக்கான அடிப்படைகளை வகுப்பது பற்றியும் ஆராய்ந்து பார்க்கவும் நாம் தயாராக இருக்கிறோம்.

எமது மக்கள் இன்று துன்பத்தின் [illegible]

[illegible]

**நாம் சமாதானத்திற்குக் கதவடைக்கவில்லை. சமாதான வழியில், பேச்சுக்களை நடத்தி பிரச்சனையைத் தீர்க்கும் நாகரீகமான நடைமுறையையும் நாம் கைவிடவில்லை. சிங்களத் தலைமையின் நேர்மையில் எமக்கு நம்பிக்கையில்லை என்பதால், சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறோம்?. ஆனால் சமாதானப் பேச்சுக்கு அரசு விதிக்கும் முன்நிபந்தனைகள் எதையும் ஏற்பதற்கு நாம் தயாராகவில்லை.**

[illegible]

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

(வே. பிரபாகரன்)
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களது மாவீரர்நாள் உரை

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்
27-11-1998

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

தமிழீழ தாய்நாட்டின் விடிவிற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர்ப் போராளிகளை இன்று நாம் எமது இதயக் கோவில்களில் பூசித்துக் கௌரவிக்கும் புனித நாள்.

ஆண்டு தோறும் நிகழும் இன்றைய நாள் மட்டும் மாவீரர்களுக்கு உரித்தானதல்ல, இன்றைய காலமும் இக் காலத்தில் கட்டவிழும் வீர விடுதலை வரலாறும், அந்த வரலாற்றின் குழந்தையாகப் பிறக்கப் போகும் தேச விடுதலையும் அவர்களுக்கே உரித்தானவை.

மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை. அவர்கள் காலத்தை உருவகிப்பவர்கள். காலத்தின் குறிப்பேட்டில் கால் பதித்துச் செல்பவர்கள். சாவு அவர்களைத் தீண்டுவதில்லை. அவர்கள் காலத்தின் காவியமாக எமது தேசத்தின் ஆன்மாவில் காலமெல்லாம் நிலைத்திருப்பவர்கள்.

வரலாறு என்பது மனித விடுதலையை நோக்கி நகரும் ஒரு பேரியக்கம். சுதந்திரப் போராட்டங்களே இந்த வரலாற்றுப் பேரியக்கத்தின் சக்கரங்களைச் சுழற்றுகின்றன. எந்த ஒரு தேசம், எந்த ஒரு மக்கள் சமூகம், சுதந்திரம் வேண்டிப் போராடுகிறதோ அங்குதான் வரலாற்றுப் புயல் மையம் கொள்கிறது.

நீண்டகாலமாகவே தமிழர் தேசம் விடுதலைக்காகப் போராடி வருகிறது. ஒரு சிறிய தேசமாக இருந்த போதும் விடுதலைக்காக நாம் கொடுத்து வரும் விலை மிகப்பெரிது. அடக்குமுறைக்கு அடிபணிந்து அடிமைகளாக வாழ்வதைவிட விடுதலைக்காக எந்த வகை விலையையும் கொடுக்க எமது தேசம் தயாராக இருக்கிறது. இதனால் தான் நாம் அதிகளவில் இரத்தம் சிந்தியும், அளப்பரிய உயிர் விலை கொடுத்தும், உறுதி தளராது போராடி வருகிறோம். அணையாத நெருப்பாக சுவாலைவிட்டெரியும் எமது வீர விடுதலைப் போரில் நாம் புரிந்து வரும் அதியுயர் தியாகங்களும் அற்புதமான அர்ப்பணிப்புகளும் இன்று முழு உலகத்தையுமே வியப்பில் ஆழ்த்தியுள்ளன. இந்த வீர விடுதலை வரலாற்றின் கதாநாயகர்களாகத் திகழ்பவர்கள் எமது மாவீரர்களே.

எமது தேசத்தின் விடுதலைக்காக தம்முயிரை அர்ப்பணித்த ஒவ்வொரு சுதந்திரப் போராளிக்கும் எமது தேசத்தின் வரலாற்றில் அழியாத இடமுண்டு. இவர்கள் சாதாரணர்களைக் சாவைத் தழுவவில்லை. எமது இனத்தின் இருப்பிற்காக, இவர்கள் தமதுயிரைத்தை அழித்தவர்கள். இந்த அற்புதமான துறவறத்தால் இவர்களது அடையாளங்கள் என்றுமே அழிவதில்லை. இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனி மனித சரித்திரம். ஆயிரமாயிரம் மாவீரர்களின், ஆயிரமாயிரம் தனிமனித சரித்திரங்கள் சங்கமமாகிய பெரு நதியாகவே எமது தேசத்தின் வரலாறு வீறுகொண்டு ஓடுகிறது.

எமது இனத்தை அழிக்க வந்த இலவாத இராணுவம் தன்னழிவையே சந்தித்து நிற்கிறது. வன்னிச் சமர்க்களங்களில் ஆயிரமாயிரம் ஆக்கிரமிப்பாளர்கள் அழிக்கப்பட்டு வருகிறார்கள். தமிழீழம் எதிரிப்படைகளின் மயான பூமியாக மாறிவருகிறது. எமது பாசறைகளிலிருந்து படரும் சுதந்திர நெருப்பை எதிர் கொள்ள முடியாது எதிரி இராணுவம் திணறுகிறது. விடுதலைப் போரில் இந்தத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமையுடன் கூறுவேன். எமது மாவீரர்கள் சிந்திய ஒவ்வொரு துளி இரத்தமும் அர்த்தமுள்ளதாக, எமது தேசத்தின் விடுதலைப் பாதைக்கு ஆதாரமானதாக அமைகிறது. அவர்களது ஒப்பற்ற உயிர்த்தியாகமே எமது மக்களை பாரிய இன அழிவிலிருந்து பாதுகாத்து வருகிறது. மாவீரர்களே எமது மண்ணின் காப்பரண்கள். எமது மக்களின் காவற் தெய்வங்கள்.

எனது அன்பார்ந்த மக்களே,

எமது மாவீரர்களை நினைவு கூரும் இன்றைய நாளில் எமது தேசியப் போராட்டத்தின் நிலை பற்றியும் வளர்ச்சிப் போக்குப் பற்றியும் நாம் சிந்திப்பது அவசியமாகிறது.

இன்றைய உலகம் மாறிவருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். புதிய நூற்றாண்டை நோக்கிய ஒரு புது யுகத்தில் மானிடம் காலடி எடுத்து வைக்கிறது. முடியப்போகும் இந்த இருபதாம் நூற்றாண்டு மனித வரலாற்றில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தியது. போர், புரட்சி, போராட்டம் என்று இப்பூமியில் பூகம்பமாக வெடித்த நிகழ்வுகள் சமூக நிகழ்வுகளிலும் [illegible] சர்வதேச நிலைமைகளிலும் [illegible] மாற்றங்களை உண்டு பண்ணின. நெருக்கடிகள் தணிந்து மனித சமூகங்கள் சுதந்திரமாக, அமைதியுடன் வாழ வழி பிறந்தது. தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றிபெற்று சுதந்திரமான தனியரசுகள் தோன்றின. இனப்பிணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது. தீர்க்கப்படாத சிக்கல்களுக்கு தீர்வு முயற்சிகள் தொடர்கின்றன. முழு உலகமுமே அமைதிப் பாதையில் முன்னேறிச் சென்று, பிறக்கப்போகும் புது யுகத்திற்கு தன்னைத் தயார் செய்யும் இன்றைய சூழலில், இலங்கைத்தீவில் மட்டும் மிகவும் கொந்தளிப்பான நிலைமை நிலவுகிறது. இங்கு தமிழரின் தேசியப் பிரச்சனை இன்னும் தணியாத நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது. இங்கு மட்டும் இன்னும் போரும் வன்முறையும் தலைவிரித் தாடுகின்றன. இலங்கையில் இந்தத் துயரமான அவல நிலை தொடர்வதற்குக் காரணம் என்ன? மாற்றமடைந்து வரும் இவ்வுலகில், நெருக்கடிகள் தீர்ந்துவரும் இச்சூழலில், அரை நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்ட தமிழரின் இனச் சிக்கல் இன்னும் தீர்க்கப்படாது இழுபடுவதற்கு காரணம் என்ன?

நீதியும் சத்தியமும் தமிழர் பக்கமாகவே நிற்கின்றன. தமிழர்கள் வேண்டுவதெல்லாம் தமக்கு உரித்தான உரிமைகளேயன்றி வேறொன்றுமல்ல. அரசியற்தர்மம் தமிழர்களுக்குச் சார்பாகவே இருக்கிறது.

நாம் எதனைக் கேட்கிறோம்? எதற்காக நாம் போராடி வருகின்றோம்.

நாம் எமது மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்குச் சொந்தமான நிலத்தில், நாம் பிறந்து வாழ்ந்த எமது



தாயகப் பூமியில், நாம் நிம்மதியாக, கௌரவமாக, எவரது தலையீடுமின்றிச் சுதந்திரமாக வாழ்வதற்கு விரும்புகிறோம். நாமும் மனிதர்கள், மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கொண்ட ஒரு மனித சமூகம், தனித்துவமான மொழியையும், பண்பாட்டு வாழ்வையும், வரலாற்றையும் கொண்ட ஒரு தனித்துவமான இனத்தைச் சார்ந்த மனிதர்கள் நாம். எம்மை ஒரு மனித சமூகமாக, தனித்துவப் பண்புகளைக் கொண்ட மக்களாக ஏற்குமாறு கேட்கிறோம். எமது அரசியல் வாழ்வை நாமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை எமக்குண்டு. இந்த உரிமையின் அடிப்படையில் நாமே எம்மை ஆளும்வகையில் ஒரு ஆட்சிமுறையை அமைத்து வாழவே நாம் விரும்புகிறோம்.

இதைத்தான் எமது மக்கள் கேட்கிறார்கள். இதற்காகவே எமது மக்கள் போராடி வருகிறார்கள். இந்த நியாயமான, நாகரீகமான கோரிக்கையை சிங்கள தேசம் மறுத்து வருகிறது. கடுமையாக எதிர்த்து வருகிறது. இந்த நீதியான வேண்டுகோளுக்காக சிங்கள ஆட்சியதிகாரம் எமது மக்களைத் துன்புறுத்தி வருகிறது. கொடுமைப்படுத்தி வருகிறது. கொன்றொழித்து வருகிறது. எமது மக்களை அரவணைத்து, இணைந்து வாழவும் விரும்பாமல், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக் கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவே தான் அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயமாகிற்று ஏற்பட்ட எமது போராட்ட வடிவங்கள் மாறியபோதும், எமது உரிமைகளுக்கான, எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப் போராட்டம் வளர்ந்து, விரிந்து இன்று இரு தேசங்கள் மத்தியிலான போராக பேருருவம் பெற்றிருக்கிறது.

இலங்கைத் தீவு இன்றும் வன்முறையில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்குக் காரணமாக விளங்குவது சிங்கள பௌத்த இனவாதத்தின் தமிழர் விரோதப் போக்கன்றி வேறொன்றுமல்ல. இனவாத ஒடுக்குமுறையின் வரலாற்று விளைபொருளாகவே தமிழரின் தேசியப்பிரச்சனை பிறப்பெடுத்தது.

கால நதியின் ஓட்டத்தில் உலகம் மாறியிருக்கிறது. உலக அரசியலும் மாறியிருக்கிறது. ஆனால் சிங்கள தேசத்தின் அரசியலில் மாற்றம் நிகழவில்லை. இதனை சிங்கள அரசியல்வாதிகள் இன்னும் உணரவில்லை என்பதுதான் மிகவும் வேதனைக்குரிய விடயம். ஒரு புராணத்துக் கற்பனையில் உதித்த கருத்துருவம் பூதாகரமாக வளர்ந்து சிங்கள அரசியல்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

உலகை மட்டுமன்றி அறிவியல் உலகையும் ஆட்டிப்படைத்து வருகிறது. இதனால் தமிழர் பிரச்சனையின் அடிப்படைகளையும், நியாயப்பாடுகளையும் அறிவூர்தியாகப் புரிந்து, அவற்றை மனிதாபிமானத்துடன் அணுகும் ஆற்றலையும் பெருந்தன்மையையும் சிங்களம் இழந்து விட்டது என்றே சொல்ல வேண்டும்.

சிங்களப்பேரினவாதத்தின் கோரப் பிடியில் சிக்கி, இத்தனை காலமாகத் தமிழினம் வடித்து வரும் இரத்தக் கண்ணீர் இன்னும் உலக சமூகத்தின் மனச்சாட்சியைத் தொடவில்லை என்பது எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகிறது. சர்வதேச சமூகத்தின் இந்தப் பாராமுகப் போக்கும், சிறீலங்காவிற்கு இந்நாடுகள் வழங்கிவரும் பெருமளவிலான பொருளாதார, இராணுவ உதவிகளும், தமிழரின் பரிதாப நிலையை மேலும் மோசமடையச் செய்கின்றன. அத்தோடு இவ்வெளியுலக உதவிகள் சிங்கள பேரினவாதத்தின் இறுக்கமான, விட்டுக்கொடாத, கடும் போக்கிற்கும் ஊக்கமளிப்பதாக அமைகின்றன. உலகின் எந்த மூலையிலும் மனித உரிமைகள் மீறப்படும் பொழுதும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்த பொழுதும், சிறிய தேசிய இனங்கள் நசுக்கப்படும் பொழுதும், குரலெழுப்பியும், தலையிட்டும் மனித தர்மத்தை வேண்டும் சர்வதேச சமூகம் ஈழத்தமிழரின் பேரவலத்தைக் கண்டும் மௌனம் சாதித்து வருவது எமக்கு வேதனையைத் தருகிறது. சர்வதேச நாடுகளிலிருந்து பெறப்படும் பொருளாதார இராணுவ உதவிகளையும், அரசியற் தார்மீக ஆதரவையும், இராஜதந்திர முண்டுகொடுப்புகளையும் பின்புலமாகக் கொண்டே சிங்களப் பேரினவாதமானது தமிழருக்கு எதிரான இன அழிப்புக் கொள்கையை துணிவுடனும், திமிருடனும், ஈவிரக்கமின்றியும் தொடர் முடிகிறது.

[illegible]

எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்கள் உலக நாடுகள் எங்கும் தஞ்சம் புகுந்து வாழ்கிறார்கள். இந்த உண்மையை உலக சமூகம் அறியும். அப்படியிருந்தும் தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் பேரவலம் உலகத்தின் புருவத்தை உயர்த்தவில்லை என்பது எமக்கு ஒரு புறம் ஆச்சரியமாகவும், மறுபுறம் வேதனையாகவும் இருக்கிறது.

இன்றைய உலக ஒழுங்கில் ஒவ்வொரு நாடும் தமது சொந்த தேசிய அபிலாசைகளிலும், வர்த்தக நலனிலும் அக்கறை கொண்டு செயற்படுகிறது என்பது எமக்குத் தெரியாத

லத்தில் தழைத்த பௌத்த சமூகத்தில் இனக்குரோதமும் போர்வெறியும் விளைவது [illegible]

[illegible]



விடுதலைப் போரில் இந்தத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமையுடன் கூறுவேன். எமது மாவீரர்கள் சிந்திய ஒவ்வொரு துளி இரத்தமும் அர்த்தமுள்ளதாக, எமது தேசத்தின் விடுதலைப் பாதைக்கு ஆதாரமானதாக அமைகிறது. அவர்களது ஒப்பற்ற உயிர்த்தியாகமே எமது மக்களை பாரிய இன அழிவிலிருந்து பாதுகாத்து [illegible] எமது மண்ணின் காப்பரண்க[illegible]

[illegible]



# ஓயாத அலைகள் II சொன்ன செய்திகள் என்ன!

## ஒரு மதிப்பீடு

சுமார் 500துருப்பினரை விலையாகக் கொடுத்து படையினர் ஆக்கிரமித்த கிளிநொச்சிப் பகுதியை 1000ற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைப் பலியாக்கி, புலிகள் பறித்தெடுத்தனர். ஓயாத அலைகள் - 02 எனப் பெயரிடப் பட்டுள்ள கிளிநொச்சித் தளம் மீதான புலிகளின் தாக்குதல் பல்வகை இராணுவ அம்சங்களை வெளிப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்குப்பின்னர் கடந்த மூன்று வருட காலமாக தரைச் சண்டைகளின்போது கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் ஆற்றிவந்த அச்சுறுத்தல் பாத்திரத்தை ஓயாத அலைகள் -02 இன்போது ஆற்றமுடியவில்லை. புலிகள் இயக்கத்தின் விமான எதிர்ப்பு படைப்பிரிவின் வளர்ச்சி கிபிர்களின் ஏகபோக வான் ஆதிக்கத்திற்கு சவால் விடுக்கும் அளவிற்கு நவீனமயப்பட்டுள்ளது.

சத்ஜய சமரின்போது நாளொன்றுக்கு, ஏழு - எட்டுத் தடவைகள் பறந்து வந்து தாம்விரும்பியவாறு குண்டுகளை வீசி புலியணிகளுக்கு தொல்லைகள் பல கொடுத்த கிபிர்கள், கிளிநொச்சியில் ஆயிரம் படையினர் அழியும் நிலையில் இருந்த வேளையிலும், நாளொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகள் மட்டுமே பறந்து வந்து அதி உயரத்தில் நின்றபடி இலக்குகளற்று குண்டு வீசிவிட்டுச் செல்லும் நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்தன.

ஓயாத அலைகள் - 02 வெளிப்படுத்திய இராணுவ சாதனைகளில் கிபிர்களின் கொட்டம் அடக்கப்பட்ட இந்த இராணுவ அம்சமும் முக்கியமானதாகும்.

சக்திமிக்க இராணுவ வழங்கல் மார்க்கத்தைக் கொண்ட வலிமை மிக்கதொரு பாரிய கூட்டுத்தளத்தின் ஓர் அங்கமாக இருந்த கிளிநொச்சித் தளத்தை கேக் துண்டு வெட்டியெடுக்கப் படுவதுபோல துண்டுபோட்டுக் கைப்பற்றி, அதைப்போராடித் தக்க வைத்திருப்பது இன்னுமொரு முக்கிய இராணுவ அம்சமாகும்.

மரபுப் போர்முறையின் பிரத்தியேக குணாம்சமாக இந்த நிலத் தக்கவைப்பு அமைகின்றது. இதைச் சாதிப்பதற்கு ஆட்பல உயர்வுடன் மரபுப்போர் ஆயுதங்களின் அதிகரித்த பயன்பாடும் மரபுப் போர்த் திறனில் வளர்ச்சியும் அவசியம். படையினரை விஞ்சக்கூடியவகையில் இந்த விசேட இராணுவ பண்புகளை புலிப் படை படிப்படியாகப் பெற்று ஒரு நிலையான இராணுவமாக (Standing Army) வளர்கின்றது என்பதையே கிளிநொச்சி வெற்றி காட்டுகின்றது.

இந்த ஆண்டு (98) மாசி மாதம் 1ம் திகதி கிளிநொச்சித்தளம் மீதான தாக்குதலின்போது, ஒன்ற[illegible] மீற்றர் நீளமும் 08 கிலோமீ[illegible]ளவையும் கொண்ட தளப்பகுதியின் நிலத்தை புலிகள் மீட்டெடுத்திருந்தனர்.

இப்போது, ஓயாத அலைகள் - 02இன் போது, மேலும் நான்கு கிலோ மீற்றர் நீளமும் 04 கிலோமீற்றர் அகலமும் சுமார் 16 கிலோமீற்றர் பரப்பளவையும் கொண்ட தளப்பகுதியின் நிலத்தை புலிகள் மீட்டெடுத்துள்ளனர்.



இந்தவகையில் 24சதுர கிலோ மீற்[illegible]யை புலிகள் மீட்டெ[illegible]. இந்த நிலத்தை அண்டியிருக்கின்ற சுமார் 75 சதுர கிலோ மீற்றர் பகுதி ஆக்கிரமிப்பு அகன்ற பகுதியாகி விட்டது. மொத்தத்தில் 100சதுர கிலோமீற்றர் நிலம் விடுவிக்கப்பட்டுவிட்டது.

மூன்று கட்டங்களாக நடந்த சத்ஜய இராணுவ நடவடிக்கை மூலம் படையினர் 12கிலோமீற்றர் நீளத்தில் 05 கிலோ மீற்றர் அகலத்தில் சுமார் 60 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கிளி, பரந்தன், ஆனையிறவு படைத்தளத்தை அமைத்து வைத்திருந்தனர். இந்த தள அமைப்பால் இதைச் சூழ்ந்திருந்த சுமார் 100சதுர கிலோமீற்றர் நிலப்பகுதி, மக்கள் வாழாப்பகுதியாக கைவிடப் பட்டிருந்தது. இந்தவகையில் கிளிநொச்சிப்படைத்தளத்துடன் கூடிய 160 சதுர கிலோமீற்றர் நிலம் இராணுவ சூனியப்பிரதேசமாக முன்னர் இருந்தது.

ஆனால், இப்போது, இந்த இராணுவ சூனியப்பகுதி, நீளத்தில் அரைப்பங்காக் குறைந்து பரப்பளவில் மூன்றில் ஒன்றாக குறைக்கப்பட்டு நிலச்சுருக்கம் அடைந்துள்ளது. இந்த நிலச்சுருக்கத்தை தடுக்க முடியாத கையறு நிலையில் சிங்களப்படை உள்ளது என்பதே வடபுலத்தின் இன்றைய இராணுவ யதார்த்தமாகும்.

முல்லைத்தீவுத்தளம் வீழ்ச்சியுறும் போது அதைப்பாதுகாக்க உதவிப்படையாக அனுப்பப்பட்ட சிங்களப் படைகள் அடித்து விரட்டப்பட்டது தெரிந்ததே. அதுபோல, கிளிநொச்சித் தளத்தைக் காப்பாற்ற பலமானதொரு உதவிப்படை அனுப்பப்பட்ட போது அதுவும் முறியடிக்கப்பட்டது.

ஓயாத அலைகள்-01 இன்போதும் ஓயாத அலைகள் -02 இன் போதும் சிங்களம் அனுப்பிய உதவிப்படைகள் இரண்டும் தோற்கடிக்கப்பட்ட உண்மைகள் ஒத்த சம்பவமாகத் தென்பட்டாலும் இந்த இரண்டு இராணுவ நிகழ்ச்சிகளும் வெவ்வேறான இராணுவ பரிமாணம் கொண்டவையாகும்.

முல்லைத்தளம் தனித்த தீவைப் போல தனியாக்கிடந்தது. உதவிப்படையாக புதிய இடத்தில் வந்திறங்கிய சிங்களப்படைகள் களம் நோக்கி நகர்வதில் எழுந்த சிக்கல் தவிர்க்க முடியாதது. முல்லைத்தீவில் உதவிப்படை சந்தித்த தோல்வி சிங்களப்படைக்கு கிடைத்த தோல்விதான் ஆயினும், இராணுவரீதியாக அது விளங்கிக் கொள்ளத்தக்கது.

ஆனால் M.S.R எனப்படும் இராணுவ வளங்கள் மார்க்கத்துடன் (Military Suply Route) இருந்த ஒரு பெரும் தளத்தின் ஒரு பகுதிக்கு கிளிநொச்சிக்கு உதவிப்படைகள் செல்லமுடியாமல் போனதை எந்த இராணுவக் காரணியினாலும் நியாயப்படுத்தமுடியாது. அது சிங்களப்படையின் இயலாமையையும் புலிப்படையின் வீரத்தையும் அப்பட்டமாக எடுத்துக் காட்டியுள்ளது.


சிங்களப்படைத் தலைமையைப் பொறுத்தவரையில் ஓயாத அலைகள் -02 இல் பலியான ஆயிரம் படையினரையும் அங்கே புலிகள் கைப்பற்றிய பெருந்தொகை ஆயுத தளபாடங்களுக்கு அப்பால் கிளிநொச்சியை மீளக்கைப்பற்ற முடியாமல் போனது தான் அதிக பிரச்சனையை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் படைத்தலைமையின் தற்போதைய போர்த்திட்டம் [illegible] அமைப்பு இதனால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

உண்மை வெற்றி (சத்ஜய) என்று பெயரிட்டு படையினர் ஆக்கிரமித்த கிளிநொச்சிப் பிரதேசத்தில் அன்றிலிருந்து இன்று வரை சிங்களப் படைகள் சந்தித்து வரும் உயிர் இழப்பும் தோல்விகளும் சத்ஜயவை, பொறுஜய (பொய் வெற்றி) ஆக்கியுள்ளது.

மூன்று கட்டங்களாக நடந்த சத்ஜய சமரில் 700 படையினர் பலியாகியிருந்தனர்.

97ஆம் ஆண்டு தைமாதம் பரந்தன் - ஆனையிறவுத் தளம்மீது நடந்த

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



(5ம் பக்கத் தொடர்ச்சி)

## ஓயாத அலைகள் II

பெரும் தாக்குதலில் 300படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த வருட (98) ஆரம்பத்தில் கிளி, பரந்தன், ஆனையிறவு படைத் தளம்மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 200 படையினர் பலியாகியிருந்தனர். இந்த தாக்குதலில் இழந்த பகுதிகளை மீட்க படையினர் நடாத்திய இரண்டுபாரிய முயற்சிகளின்போது மட்டும் 500 படையினர் கொல்லப்பட்டிருந்தனர். இதைவிட அன்றாடம் நடந்த சிறு சிறு சண்டைகளில் சுமார் 200 படையினர் பலியாகியிருந்தனர். தற்போது ஓயாத அலைகள் 02தாக்குதலில் 1000க்கும் அதிகமான படையினர் பலியாகி இருந்தனர்.

இந்தவகையில் சத்ஜய தொடங்கியதிலிருந்து இன்றுவரையான 2 மாதங்களில் கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு முனையில் மட்டும் 3000க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு விட்டனர் இதனுடன் இதேபோர் அரங்கில் படையினரின் 09 ஆட்டிலறிகள் நாசமாக்கப்பட்டிருந்தன. 07 ராங்க்குகள் அழிக்கப்பட்டிருந்தன. பெருமெடுப்பிலான வெடிபொருள் களஞ்சியங்கள் அழிக்கப்பட்டிருந்தன.

சிங்களத்தின் உண்மை வெற்றி இவ்வாறு படாதபாடுபட்டபடி உள்ளது. உண்மை வெற்றியை, பொய் வெற்றியாக்கிவிடுவதில் தீவிரமாகவுள்ள புலிகள் இயக்கம், இதேபோர் அரங்கில் மட்டும், 1400 போராளிகளை இழந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சித்தளத்தை அழித்து நிலத்தை வெற்றிகரமாக மீட்டெடுக்க வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்தபடி தலைவர் பிரபாகரன் கடந்த ஆண்டு தைமாதத்தில் இருந்து பல முயற்சிகளைச் செய்து வந்தார்.



அவரது விடாமுயற்சி இப்போது வெற்றியில் முடிந்துள்ளது. ஒரு வருடமும் 5 மாதங்களாகவும் ஜயசிக்குறுய் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரை கிளிநொச்சி வீழ்ச்சி சலிப்பிற்கும் விரக்திக்கும் உள்ளாக்கும். ஜயசிக்குறுயின் தலைவிதியும் இவ்வாறுதான் இரத்தம் தோய்ந்ததாக இருக்கப்போகிறது என்ற எதிர்கால உண்மை படையினரது மனநிலையைப் பாதிக்கலாம்.

இதை, ரத்துவத்தையின் ஜம்பம் அடிக்கும் அறிக்கைகளால் தடுக்க முடியாது போகலாம். கிளிநொச்சியில் படையினர் சந்தித்த பேரிழப்பை மறைக்க மாங்குளம் கைப்பற்றுகையை ரத்வத்த தூக்கிப்பிடிக்கின்றார். ஆனால், இரண்டு சம்பவங்களும் ஒப்பிடமுடியாதவை வேறு வேறான இராணுவ பரிமாணங்களை உடையன.

இதேசமயம் கிளிநொச்சி சண்டைகளில் இருபகுதியினரினதும் உயிர் இழப்புக்களை விகிதாசார கணக்குகளுடன் விளக்கி கிளிநொச்சியில் புலிகளே தோற்றுள்ளனர் என்று அவர் தீர்ப்புக்கூறுகின்றார்.

கிளிநொச்சித் தாக்குதலில் படையினரின் இழப்பு மொத்த ஆள்பலத்தில் 0.9 வீதம் என்றும் புலிகளின் இழப்பு 35 வீதம் என்றும் கணக்கு காட்டியுள்ளார்.

இவ்வாறுதான் முல்லைத்தீவுத் தளம் அழிக்கப்பட்டபோதும் விகிதாசாரக் கணக்குக்காட்டி அங்கேயும் படையினருக்குத்தான் வெற்றி என்று முடிவு சொல்லியிருந்தார். ஒட்டு மொத்த போர் நிலைமை பற்றியும் கணக்குக் காட்டியுள்ளார். 97 விகிதமான போர் முடிவுக்கு வந்து விட்டது என்று 2 மாதங்களுக்கு முன்னரும் பகிரங்கமாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ரத்வத்தை கூறும் இராணுவக் கணக்குகளை சிங்கள மக்கள் செவிமடுக்கும் வரை அவர் கணக்கிட்டுக் கொண்டேயிருப்பார். முல்லைத்தீவில் ஆயிரம், ஜெயசிக்குறுவில் மூவாயிரம் கிளிநொச்சியில் 1300 என சிங்களப் படையினர் தனித்த தாக்குதல்களிலும், தனித்த ஒரு ராணுவ நடவடிக்கையிலும் பலியாகி வருகின்றனர். 2ஆம் உலகப் போருக்கு பின்னான சமர்களில் இவ்வளவு தொகையில் அடுத்தடுத்து இராணுவ அழிவு நடைபெற்றதாக வரலாறேயில்லை.

இத்தொடர் படையழிவைச் சுட்டிக்காட்டி சந்திரிகா அரசாங்கம் தனது போர் மூலோபாயத்தை மாற்ற வேண்டுமெனறே சிங்களத்தின் பெரும்பாலான இராணுவ விமர்சகர்களும் சிங்கள அரசியல் தலைவர்களும் ஆலோசனை கூறுகின்றனர்.

ஆனால், அரசாங்கத்தின் இராணுவ அணுகுமுறைகளுக்கு கிடைத்து வரும் தோல்வியையே இந்தத் தொடர்படை அழிவுகள் காட்டுகின்றன என அவர்கள் இடித்து உரைப்பதில்லை.

தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சிங்கள அரசாங்கங்கள் கடைப்பிடித்து வரும் இராணுவ அணுகுமுறை காலாவதியாகி விட்டது என்று அவர்கள் எடுத்துக் கூறுவதில்லை.

தமிழ் சிங்கள இனப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு அரசியல் ரீதியாக அணுக வேண்டிய காலம் பிறந்து விட்டது என்று அவர்கள் வலியுறுத்துவதில்லை.

முல்லைத் தீவுத்தளத்தை புலிகள் வெற்றி கொண்டதால் ஏற்பட்ட இராணுவ தன்மைகளாக கிளிநொச்சிப் படைக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சித்தளத்தை புலிகள் வெற்றி கொண்டதால் கிடைத்த இராணுவ தன்மைகளால் எந்த இடத்தில்? எப்போது? இன்னுமொரு நான்கு இலக்க படையழிவை சிங்களம் சந்திக்கப் போகின்றதோ!......

(நன்றி விடுதலைப் புலிகள்)

## கொசோவாவும் தமிழீழமும்




100k Sq. Km.; $ 21 b-GDP



மிலோசெவிக்



சந்திரிகா குமாரதுங்க




55k Sq. Km.; $ 70 b-GDP

| மக்களைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள்சபையின் தீர்மானம் | |
|---|---|
| கொசோவியர்களுக்காக # 1199 & 1160 | தமிழர்களுக்காக ஒன்றுமில்லை |

| | கொசோவ (சேபியாவின் 1/5 நிலப்பகுதி) | தமிழீழம் (இலங்கைத்தீவின் 1/3 நிலப்பகுதி) |
|---|---|---|
| பிணக்குரிய மக்கள் | சேர்பியர் எதிர் கொசோவியர் | சிங்களவர் எதிர் தமிழர் |
| சனத்தொகை | கொசோவாவில் 90% பேர் அல்பேனியர்கள் | தமிழீழத்தில் 90% பேர் தமிழர்கள் |
| அதிகாரம் | சேர்பியாவில் உள்ள சேர்பியர்; 110 இலட்சம் மக்கள் | சிறீலங்காவில் உள்ள சிங்களவர்; 180 இலட்சம் சிங்களவர்கள் |
| இராணுவக் கட்டமைப்பு | 100 % சேர்பியர் | 100% சிங்களவர் |
| ஆக்கிரமிப்பவர்கள் | 40,000 சேர்பிய இராணுவம் | 100,000 வட கிழக்கில் உள்ள சிங்கள இராணுவம் |
| ஆயுதப் போராட்ட ஆரம்பம் | மார்ச் மாதம் 1998 (7 மாதங்கள்) | யூலை மாதம் 1983 (15 வருடங்கள்) |
| கொலைசெய்யப்பட்டவர்கள் | 300-க்கு மேல் | 60,000-க்கு மேல் |
| அகதிகள் | 250,000 பேர்; ஒரு தடவையில் இடம்பெயர்ந்தவர்கள் | 1,000,000 பேர்; பல தடவைகளில் இடம்பெயர்ந்தவர்கள் |
| காணாமல் போனோர் | யாரும் இல்லை (அறிந்த வரையில்) | 1000 (மூன்று வருடங்களுக்குள்) பேருக்கு மேல் |
| புதைகுழிகள் | ஒன்றும் இல்லை (அறிந்தவரையில்) | வடக்கில் மட்டும் 3 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன |
| விடுதலைப் போராளிகள் | கோசோவ விடுதலை இராணுவம் (KLA) | தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) |
| குடியேற்றங்கள் | சேர்பியர் சேர்பியர் கொசோவா பகுதியில் குடியேறினர் | தமிழீழ தாயக பூமியில் சிங்களவர் குடியேறினர் |
| இணைக்கப்பட்ட ஆண்டு | சேர்பியாவுடன் 1989ம் ஆண்டு இணைக்கப்பட்டது | சிறீலங்காவுடன் 1878ம் ஆண்டு இணைக்கப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | ITALY<br>TCC<br>Via Mariano Stabile - 49,<br>90139 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C.<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |



சூரியக்கதிர்-1,2,3. நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்தின் போரிடும் திறனை நசுக்கி விட்டது என்பது, சிங்கள அரசினது கருத்து மட்டுமல்ல, பெரும்பாலான உலக இராணுவ - அரசியல் ஆய்வாளர்களும் அவ்வாறே கருதினர்.

பாரிய முகாம் தகர்ப்புகளை புலிகளால் இனிமேல் நடத்த முடியாது என்றும், அரசுக்கு தலையிடியைக் கொடுக்கும் வகையில் சிறு சிறு தாக்குதல்களை மட்டுமே புலிகளால் நடாத்த முடியும் என்றும், அவர்கள் கருத்துக் கூறியிருந்தனர்.

சுருக்கமாகச் சொன்னால் தீவிரம் குறைந்த ஒரு போர் முறையை (Law Intensive Warfare) மேற் கொள்ளவே புலிகளின் தற்போதைய இராணுவ பலம் இடம் கொடுக்கும் என்று, பெரும்பாலான ஆய்வாளர்கள் ஆருடம் கூறியிருந்தனர்.

ஆனால், இத்தகைய படையியல் கணிப்பீடுகள் மற்றும் இராணுவ அபிப்பிராயங்கள் அனைத்தையும் ஓயாத அலைகள் மூழ்கடித்து

புலிகள் இயக்கம் பற்றிய இராணுவ மதிப்பீடுகளை சமகால ஆய்வாளர்களால் சரியாகக் கணிக்க முடியாதுள்ளதற்குப் பிரதான காரணம், அந்த ஆய்வாளர்கள் வைத்திருக்கும் இராணுவ அளவு கோல்கள்.

இந்த அளவு கோல்கள், உலகின் இராணுவ சிந்தனையாளர்கள் மற்றும் புகழ்பூத்த படைத் தளபதிகள் ஆகியோரின் போதனைகள், அனுபவங்கள் என்பவற்றால் ஆக்கப்பட்டுள்ளன.

# புரியாத புதிர்

விட்டது.

தென்மராட்சி - வடமராட்சியிலிருந்து போரிடாது பின்வாங்கிய புலிகளின் செயலைபுரிந்து கொள்ள முடியாது திண்டாடிய இராணுவ உலகம், முல்லைத்தீவுப்படைத்தளத்தைப் புலிகள் கைப்பற்றிவிட்டனர் என்ற செய்தி வெளியானவுடனும், புலிகள் இயக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாது விழித்தனர்.

(இப்போது, கிளிநொச்சிப்படைத்தளத்தை புலிகள் கைப்பற்றி விட்டனர் என்ற செய்தி வெளியாகிய பின்னரும் ஆய்வாளர்கள் வியக்கின்றனர்)

மொத்தத்தில், இராணுவ உலகிற்கு அன்றும், இன்றும் புலிகள் இயக்கம் ஒரு புரியாத புதிராகவே உள்ளம்.

தலைவர் பிரபாகரனின் இராணுவச் செயற்பாடுகளில் உள்ள தனித்தன்மைகளே, புலிகள் இயக்கத்திற்கு இத்தகைய புதிர்த்தன்மைகளைக் கொடுத்துள்ளன.

ஆனால், இதற்கு அப்பால், தலைவர் பிரபாகரனின் இராணுவ சிந்தனைகளும், செயற்பாடுகளும், பெரும்பாலும் தனித் தன்மை வாய்ந்தவைகளாக அமைந்துள்ளன. இது காரணமாக, தாம் வைத்திருக்கும் இராணுவ அளவுகோல்களைப் பயன்படுத்தி பிரபாகரனின் போர்க்கலையை சரியாக அளந்து கணிக்க முடியாது வல்லுனர்கள் திண்டாடுகின்றனர்.

இதனால் புலிகள் இயக்கம் பற்றி இராணுவ விமர்சகர்கள் கூறும் கருத்துக்கள் கணிப்புக்களில் அடிக்கடி பெரும் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன.

என்றைக்குத் தலைவர் பிரபாகரன் தனது போர்க்கலைமுறைகளை விரிவாக விளக்கி உலகிற்கு வழங்குகின்றாரோ, அன்றைக்குத் தான் புலிகள் இயக்கம் பற்றிய புதிரும் விடுபடும்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சண்டேரைம்ஸ் (ஒக்டோபர் 11) பத்திரிகையில் வெளிவந்த ஒரு அங்கதச் சித்திரம் இது. பிந்து பிந்துவின் தந்தை பேர்சி மற்றும் தாத்தா ஆகியோர் கதை மாந்தர்கள்.

'போர் எப்படிப்போகுது தாத்தா பிந்து கேட்டான்.'

'எந்தப்போர் பிந்துவின் அப்பா பேர்சி திருப்பிக் கேட்டார்.'

'ஏன் வடகிழக்குப் போர்தான் தாத்தா.'

'அங்கே போர் பெரிதாக நடக்கவில்லையே பிந்து.'

வீதப்போர் மட்டும் மிஞ்சியிருக்கிறது என்பது தானே.

ஆப்படியென்றால் அந்த 4 வீதப் போரும் விரைவில் முடிந்து விடும்தானே!

ஆனால், கிளிநொச்சியின் கட்டுப்பாட்டை படையினர் இழந்தபோது இன்னொரு 30 வீதத்தை படையினர் இழந்து விட்டனர் என்று சிலர் வாதிடுகின்றனர்.

'அதுதான் எதிரியின் பிரச்சாரம் பிந்து' பேர்சி எச்சரித்தார்.

அப்படியென்றால் வைத்தியசாலைகள்

4 வீதத்தை எப்போது முடிப்போம்.

ஜெனரல் விரும்புகின்றபொழுது.

ஏன் அப்படிச் சொல்கின்றாய்.

ஏன் பிந்து! சிங்கள புதுவருட பிறப்பிற்கு முன்னர் போரை முடிப்பேன் என்று ஜெனரல் உறுதியளித்தது உனக்கு நினைவில்லையா!

அதன்பிறகு இந்த வருட சுதந்திரத்திற்கு முன் பிரபாகரனுடன் கைகுலுக்குவேன் என்று ஜெனரல் உறுதியளித்திருந்தார்.

# 'ஜெனரல்' கணக்கு



'ஆனால், தாத்தா, அங்கே நூற்றுக்கணக்கில் இராணுவம் பலியாகிவிடடது. என்று சிலர் கருதுகிறார்கள் தாத்தா.'

புலிப்பிரச்சாரம் பிந்து அப்படியென்று எப்படி உறுதியாகச் சொல்லுவியள் தாத்தா.

ஏன் பிந்து! 90 வீதப் போர் முடிஞ்சுது என்று ஜெனரல் சொல்லிப்போட்டார்.

'ஆனால் தாத்தா...' பிந்து தயங்கினான்.

'அதில சந்தேகப்பட ஒன்றுமில்லை பிந்து' பேர்சி சொன்னார்.

96 வீதப்போர் முடிந்து விட்டது என்று ஜெனரல் சொன்னால் அதன் அர்த்தம் 4

காயக்காரர்களால் நிரம்பி வழிகின்றனவே! அது ஏன்? பிந்து அறிய விரும்பினான்.

அது ஜெனரல் பெற்ற ஆகப்பிந்திய வெற்றியான மாங்குளம் சண்டையில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தணிக்கை பற்றி—

அது எதிரியின் பிரச்சாரத்திலிருந்து உன்னைப் பாது காக்கவே உள்ளது.

அப்படியானால் எல்லாம் தீர்க்கப்பட்டு விட்டதா?

4 வீதம் மட்டுமே உள்ளது.

பேர்சி நம்பிக்கையூட்டினார்.

உண்மைதான் அப்படித்தான் சொல்லியிருந்தார். ஆனால் ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை பிந்து.

மிச்சமுள்ள 4 வீதப்போர் என்பது நடந்து முடிய நான்கு கிழமைகள், நான்கு மாதங்கள், அல்லது நான்கு வருடங்கள் செல்லலாம் பிந்து.

கணிதத்தில் ஜெனரல் சுத்த சூனியமாக இருக்கின்றார். என்று பிந்து சொன்னான்.

பேர்சி மறுக்கவில்லை.

# மாவீரர் நாள்



இங்கிலாந்தில் லண்டன் நகரில் 28–11–98 அன்று நடந்த மாவீரர்நாள் நிகழ்வில் 2000ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் ஒஸ்ரிஸ், நந்தன் இதழாசிரியர் திரு. சுபவீரபாண்டியன் ஆகியோரின் சிறப்புப் பேச்சுக்களுடன் எழுச்சி நடனங்கள், திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களின் இசைக்கச்சேரி, நாடகம் என்பன இடம் பெற்றன. இந்நிகழ்வில் மலேசியக் கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட தோள் கொடுப்போம் எனும் சீடியும் வெளியீடு செய்யப்பட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





இத்தாலியில் பலர்மோ நகரில் 29.11.88 அன்று மாவீரர் நாள் நிகழ்வின்போது எழுச்சி நடனங்கள், கவிதா நிகழ்வு நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளுடன் நெருப்பு மலர்கள் என்னும் தமிழீழத் திரைக்காவியமும் திரையிடப்பட்டது.

இத்தாலிய சகோதரியான செல்வி வென்சா மாவீரர் பற்றி சிறப்புரையாற்றினார்.

இத்தாலிய பிற நகரங்களான ஜெனோவா, பொலொனியா, றெஜியோ, எமிலியா, பியெல்லா, ஆகிய இடங்களிலும். 27ம், 29ம் திகதிகளிலும் மாவீரர் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன.

பியோமொந்தே, லொம்பாத்தியா, வாழ் தமிழர்களால் 29.11.98 அன்று நினைவு கூரப்பட்ட மாவீரர் நாளில் பேச்சுக்கள், கவிதைகள், எழுச்சி நடனங்கள், நாடகம், புரட்சிக்கானங்கள். என்பன இடம் பெற்றதுடன் பேராசிரியர் கலாநிதி எமிலியோ ஆஸ்தி அவர்களால் சிறப்புரையும் வழங்கப்பட்டது.



கடந்த 21.11.98 சனியன்று ஜேர்மனியில் கேர்ண நகரில் நடைபெற்ற மாவீரர் நாள் நினைவு எழுச்சி நிகழ்ச்சியில் 8000-ற்கும் அதிகமான மக்கள் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்திருந்த நந்தன் இதழின் ஆசிரியர் திரு. சுப. வீரபாண்டியன் அவர்களின் சிறப்புரையுடன், சிறுவர்களால் வழங்கப்பட்ட மாவீரர் எழுச்சி உரைகள், கவிதை, எழுச்சி நடனங்கள், தமிழீழ இசைக்குழுவின் இசைநிகழ்ச்சி, நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

மண்டபவாசலில் மாவீரர் துயிலும் இல்லமும் உள்ளே மாவீரர்களின் உருவப்படங்களும் வைக்கப்பட்டிருந்தமை எழுச்சி உணர்வைத் தோற்றுவித்தது.

# - 1998



பிரான்சில் 29-11-98 ஞாயிற்றுக்கிழமை அன்று பாரிசின் புறநகர்ப் பகுதியான லாபிளான் சென்டெனி எனுமிடத்தில் தேசத்தின் புதல்வர்களை நினைவிலிருத்தி நடத்தப்பட்ட வீரவணக்க நினைவில் 2000ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தமது வீரவணக்கத்தை தெரிவித்தனர். இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செலகப் பொறுப்பாளர் திரு மனோகரன், தமிழீழ விடுதலை உணர்வாளர் சுகிர்தராஜ் மற்றும் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த திலீபன் மன்றத் தலைவரும், தமிழ் தமிழர் இய[illegible] திரு. தியாகு அவர்களும் சிறப்புரையாற்றினர்.

மாவீரர்களான நாதன், கஜன் ஆகியோரின் கல்லறை[illegible] 27-11-98 மாவீரர் தினத்தன்று மதியம் 1.35 ற்கு ஈகைச்சுடர் ஏற்றி வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர்நாள்,

எமது தேசத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த இலட்சிய வேங்கைகளை நாம் இதயக் கோயிலில் வைத்து நினைவுகூரும் புனித நாள். எமது மாவீரர்கள் இந்த மண்ணுக்காக மடிந்தார்கள். இந்த மண்ணின் விடிவிற்காக மடிந்தார்கள். எமது மண்ணில் எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்ற இலட்சியத்திற்காக மடிந்தார்கள். எமது மண் நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண். எமது மூதாதையோரின் பாதச் சுவடுகள் பதிந்த மண். எமது பண்பாடும் வரலாறும் வேர் பதிந்து நிற்கும் மண் எமக்கே சொந்தமாகவேண்டும் என்ற குறிக்கோளிற்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள். அந்நிய ஆதிக்க விலங்குகளால் கட்டுண்டு கிடக்கும் எமது தாயக மண்ணை மீட்டெடுத்து தன்னாட்சி உரிமை பெற்ற சுதந்திர தேசமாக உருவாக்கும் இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள். எமது தாயக மண்ணை மீட்டெடுக்கும் புனிதப் போரில் எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் மகத்தானவை. அவற்றை சொற்களால் செதுக்கிவிட முடியாது. உலக வரலாற்றில் எங்குமே, என்றுமே நிகழாத அற்புதங்கள் இந்த மண்ணில், இந்த மண்ணிற்காக நிகழ்ந்திருக்கின்றன. அந்த வீரகாவியத்தைப் படைத்த ஆயிரமாயிரம் மாவீரரின் இலட்சியக் கனவு, அவர்களது ஆன்மீக தாகம் என்றோ ஒருநாள் நிறைவுபெறுவது திண்ணம்.

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்களின்
மாவீரர்நாள் உரையிலிருந்து...



சுவிசில் 05-12-98 அன்று பேர்ன் எக்ஸ்போ அரங்கில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் 6000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். சிறப்புப் பேச்சாளராக, தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த திலீபன் மன்றத்தலைவரும் தமிழ் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்தவருமான திரு. தியாகு, மற்றும் பேராசிரியரும், திரைப்பட நடிகருமான பெரியார் தாசனும் கலந்துகொண்டனர். உணர்வுபூர்வமான கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தமிழீழ மண்மீட்புக்காய் மக்கள் 5,40,000 சுவிஸ் பிராங்குகளை வாரி வழங்கினர்.

சுவிஸ் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் தயாரிக்கப்பட்ட ஈழம் மலர்கின்ற நேரம் இசைத்தட்டும், தமிழீழக் கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட வீரத்தின் விளைநிலம் எனும் இசைத்தட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

# கிளிநொச்சிப் படைத்தளம் வயல் சூழ்ந்த கட்டடக்காடு



கிளிநொச்சி பரந்தன் ஆனையிறவு வெற்றிலைக்கேணி இராணுவக் கூட்டுத்தளம் (Military complex) வடபுலத்தின் மிகப் பலமான படைத்தளம். அத்துடன் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள 30,000 படையினரை வன்னிப் பெருநிலப் பரப்புடன் இணைத்துவிடும் ஒரு இராணுவ பாலமாகவும் இந்தக் கூட்டுத்தளம் செயற்படுகின்றது.

இந்தக் கூட்டுத் தளத்தில் சிங்களத்தின் 54வது படையணி (Division) நிலைகொண்டுள்ளது. மேஜர் ஜெனரல் ஜோகான் குணவர்த்தனாவை தலைமை அதிகாரியாகக் கொண்ட இந்த டிவிசனின் தலைமையகம் ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ளது.

சிங்களப் படையைப் பொறுத்தவரையில் ஒரு டிவிசன் என்பது சுமார் 8,000 படையாட்களைக் கொண்டது. ஆனால், இந்தச் சிறப்பு டிவிசன் வழமையைவிட அதிக அளவு சிப்பாய்களைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. அதுவும் சண்டை அனுபவம் வாய்ந்த துருப்பினரே 54வது டிவிசனில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாபெரும் கூட்டுத்தளம் முப்பெரும் பகுதிகளாக இயங்கியது.

**1. கிளிநொச்சி இராணுவத்தளம்**
**2. பரந்தன் ஆனையிறவு இராணுவத்தளம்**
**3. இயக்கச்சி வெற்றிலைக்கேணித்தளம்**

ஒவ்வொரு தளமும் ஒவ்வொரு பிரிகேட் படையணியால் ஒவ்வொரு பிரிகேடியர் தலைமையில் நிர்வகிக்கப்படுகின்றது. இதேவேளை ஆட்லறி பிரிகேட், இன்ஜினியரிங் பிரிகேட் என்று துணை பிரிகேட்டுகளும் அதற்குரித்தான பிரிகேடியர்களின் தலைமையில் உள்ளன.

முப்பெரும் பகுதிகளில் முதற்பெரும் தளமாக கிளிநொச்சித்தளமே இருந்தது. ஆட்தொகையைப் பொறுத்தவரையிலும் காப்பரண்களின் வலுவைப்பொறுத்த வகையிலும் போர் அனுபவம் வாய்ந்த சிப்பாய்களைப் பொறுத்த வகையிலும் கிளிநொச்சித் தளம் வலிமை மிக்கதாகவே இருந்தது.

54வது டிவிசனிலுள்ள [illegible]வது பிரிகேட் (543 பிரிகேட்) கிளிநொச்சிப் படைத்தளத்தில் நிலைகொண்டிருந்தது. கிளிநொச்சிப் பிரிகேட்டின் பிரிகேடியராக உபாலி எதிரிசிங்க பணியாற்றியிருந்தார்.

தாக்குதலுக்குள்ளானபோது இந்த கிளிநொச்சித்தளம் ஏறக்குறைய 04 கிலோமீற்றர் நீளத்தையும் 03 கிலோ மீற்றர் அகலத்தையும் கொண்ட சுமார் 20 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள பகுதியாக இருந்தது.

சண்டை அனுபவமிக்க நான்கு பற்றாலியன்களாக கிளிநொச்சி [illegible] அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பற்றாலியன் என்பது 300 அல்லது 400 சிப்பாய்களைக் கொண்டது.

பத்தாவது சிங்க றெஜிமென்ற் (10 S.R.) ஆறாம்வாய்க்கால் பகுதியிலும்,

நான்காவது சிங்க றெஜிமென்ற் (04 S.R.) கணேசபுரப் பகுதியிலும்,

ஆறாவது கெமுனு வோச் (06 G.W) பிரதான பாதையோரப்பகுதியிலும்,

ஏழாவது கெமுனு வோச் (07 G.W) திருவையாறு பகுதியிலும் நிலைகொண்டிருந்தன.

இதேவேளை, எமது தாக்குதல் விழுக்கிற்குள் பரந்தன் ஆனையிறவு பிரிகேட்டின் இரண்டு பற்றாலியன்களும் அடங்கியிருந்தன.

ஒன்பதாவது கெமுனு வோச் (09 G.W) குஞ்சுப்பரந்தன் வாய்க்கால் பகுதியிலும்,

ஏழாவது சிறீலங்கா காலாட்படை (07 S.L.T) காடியாபோக்கு மேற்குப் பகுதியிலும் நிலைகொண்டிருந்தன.

மக்கள் வங்கிக்கட்டடத்திற்கு அருகாமையிலுள்ள பகுதியில் கிளிநொச்சிப் பிரிகேட்டின் தலைமையகம் அமைக்கப்பட்டிருந்தது.

மொத்தமாக கிளிநொச்சிப் படைத்தளம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட படையினரைக் கொண்டிருந்தது.

வயலும் வயல்சார்ந்த நிலத்தாலும் சூழப்பட்டுக்கிடக்கும் ஒரு கட்டடக் காடுதான் கிளிநொச்சித்தளம். தளத்தின் தற்காப்பிற்கு இந்த புவியியல் அமைப்பு பலமான முதுகெலும்பாக விளங்கியது.


இந்த இயற்கை அரணையும் சேர்த்து தளத்திற்கு வெளியேயும் உள்ளேயுமான பதுங்ககுழிகளுடன் நான்கு கட்டங்களைக் கொண்ட தற்காப்பு ஏற்பாடுகளை படையினர் செய்து வைத்திருந்தனர்.

(i) தளப்பகுதிக்கு வெளியே தளத்தைச் சூழ காவலுக்காக முன்நகர்த்தப்பட்டு ஒரு கண்காணிப்பு அமைப்பைப் படையினர் செய்து வைத்திருந்தனர். அக் கண்காணிப்பு நிலைகள் (Listening Post) அவதானிப்புக் கோபுரங்கள் (Observation Posts) என்று அழைக்கப்பட்டன.

(ii) உருமறைக்கப்பட்ட நிலைகளில் இருந்தவாறு புலிகளின் நகர்வை தளத்திற்கு அறிவித்து எச்சரிக்கை செய்யும் ஒற்றர்கள் போல இந்த நிலைகள் இருக்கும். புலிகளின் வேவு வீரர்களை தாக்கி கொல்வதும் இவை முனைவதும் இதேவேளை இத் தடப்பகுதியில் புகுவதற்கும் அமைக்



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive




**சிங்களத்தின் முதல்தர (A1) இராணுவத் தளங்களில் ஒன்றான கிளிநொச்சிப் பெருந்தளத்தின் மாதிரித் தோற்றம்**

ளையும் பகைவன் உலாவவிடுவான்.

அதேசமயம், தேவை ஏற்படும் இடங்களில் நிலக்கண்ணிகளையும் புதைத்து - காவல் செய்வான். இந்த முதலாவது பாதுகாப்பு ஏற்பாட்டின் பிரதான நோக்கம், தளம் - மீதான தாக்குதலை முன்னரே அறிவிப்பதும் - தாக்கநகரும் புலி அணிகளை வழிமறித்துத்தாக்கி தாக்குதல் திட்டத்தை சிதைத்துவிடுவதுமாகும்.

20கிலோ மீற்றர் பரப்பளவுள்ள தளத்தைச் சுற்றிச் சூழ அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது பாதுகாப்பு அரண் வேலி, முன்னணிப்பாதுகாப்பு அரண்கள் எனப்படும். 25 அல்லது 30 மீற்றர்களுக்கு ஒரு காவல் அரண் என்ற ரீதியில் 300ற்கும் மேற்பட்ட காவல் நிலையங்களைக் கொண்டதாக இந்த முன்னணிப் பாதுகாப்பு அரணின் அமைப்பு இருந்தது. மண் அணைகளாலும் - முட்கம்பிச்சுருள்களாலும் - கண்ணி வெடிகளாலும் இந்தப் பாதுகாப்பு வேலி அரண் செய்யப்பட்டிருந்தது.

(3) மூன்றாம் கட்ட பாதுகாப்பு ஏற்பாட்டை பலமான நிலைகள் என படையினர் அழைக்கின்றனர். பெயர் சூட்டலுக்கேற்றாப்போல் இந்தக் காப்புவேலி வலிமையானதாகவும் அதி உயர் விழிப்பு நிலையிலும் இருக்கும். இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டிலேயே தளத்தின் பெரும்பாலான மினி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருமுகாம் அணிகளினதும் சிறப்புக் கொமாண்டோக்களினதும் தலைமையகங்கள் மினிமுகாம்களாகவும் செயற்படும். மொத்தம் 16 மினிமுகாம்கள் கிளிநொச்சித் தளத்திலிருந்தன. இந்த மூன்றாவதுகட்ட பாதுகாப்பு வேலியை வெற்றி கொண்டால்தான் தளத்தின் மையப்பகுதியை அடையலாம்.

(04) நான்காவது பாதுகாப்பு ஏற்பாட்டை ஆழமான நிலைகள் என்று படையினர் பெயரிட்டழைக்கின்றனர். இந்த ஆழமான நிலைக்குள்ளேயே தளத்தின் பிரதான முகாம் உள்ளது. அத்துடன் பற்றாலியன் தலைமையகமும் - கட்டளைமையமும் - ஆயுதக்களஞ்சியமும் - மோட்டார் ஏவுதளமும் இந்தப் பகுதியில் உள்ளது. அதாவது, தளத்தின் இதயப்பகுதி இந்த ஆழமான நிலைகள் என்ற பாதுகாப்பு அமைப்பால் காவல்காக்கப்படுகின்றது. இந்தப் பாதுகாப்பு நிலைகள் வெற்றி கொள்ளப்படும் வரை தளம் கட்டமைப்புடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும். இந்தப் பாதுகாப்பு வேலியை உடைத்து - உள்நுழைந்து தாக்கி - சேதத்தை விளைவிக்கும்போதே தளம் மரணப் படுக்கைக்குச் செல்லும்.

தளத்தில் நிலைகொண்டிருந்த ஒவ்வொரு பற்றாலியனும் மோட்டார் அணிகளைக் கொண்டிருந்தன. 120 மில்லிமீற்றர் மோட்டார்களும் - 81 மில்லிமீற்றர் மோட்டார்களும் இதில் குறிப்பிடக்கூடியவை. ஆட்டிலறித் தளம், ஆனையிறவு மற்றும் இயக்கச்சிப் பகுதியில் அமைந்திருந்தது. இந்த ஏவுதளங்களிலிருந்து கிளிநொச்சிப் பிரிகேட் விரும்புகிற வகையில் ஆட்டிலறித்தாக்குதலை நிகழ்த்தமுடியும். தளத்தினுள்ளே பலவகையான கவச வாகனங்களும் - 30கலிபர் துப்பாக்கிகள் மற்றும் ஆர்.பி.ஜீக்கள் உட்படப் பல்வேறு வகையான இயந்திரத் துப்பாக்கிகளும் தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருந்தன. இவற்றுடன் கிபிர் குண்டு வீச்சு விமானங்களும் தளத்தின் பாதுகாப்பை நிச்சயப்படுத்தின.

கிளிநொச்சித்தளம் ஒரு பிரிகேட் படையினரைக் கொண்டிருந்தாலும், ஒரு டிவிசன் படையணியைக் கொண்டிருந்த பாரிய கட்டுத்தளத்தில் பிரிக்கமுடியாத ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சிப்படைத்தளம் மீதான தாக்குதல் என்பது குறித்த ஒரு டிவிசன் படையாட்களுக்கும் அதன் படைத்தளபாடங்களிற்கும் எதிரான ஒரு சண்டை என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் இருந்து குடா நாட்டிற்கு ஒரு இராணுவப்பாதையை அமைத்துக் கொண்டுவர முயலும் ஜயசிக்குறுப் படை நடவடிக்கைக்கு கிளிநொச்சிப்படைத்தளம் ஒரு பலமான கேந்திர மையமாகவே இருந்தது.

அத்துடன் தற்காப்புப்போரொன்றை (Defensive) நடத்துவதற்கேற்ற அனைத்துவகை சாதக அம்சங்களையும் கிளிநொச்சிப்படைத்தளம் தன்னகத்தே வைத்திருந்தது.

வெட்டவெளிகளாய் ஆழமாக்கப்பட்ட சிமெந்துக்கட்டடங்கள் படையினருக்கு இலகுவாகவே கிடைத்த பதுங்குகுழிகளாகவும் அரண்களாகவும் அமைந்துவிட்டன.

இரணைமடுக்குளத்தின் பாசன நிலங்களில் பெரும் பகுதியை தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருந்த கிளிநொச்சித்தளம் வன்னியில் உணவு, உற்பத்தியையும் கணிசமாகப் பாதித்தபடியே இருந்தது.

ஏற்கனவே இரண்டு தடவைகள் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதால் அதி உயர் விழிப்பு நிலையுடன் கூடிய உச்சப்பாதுகாப்பை கிளிநொச்சித்தளம் கொண்டிருந்தது.

இத்தகைய உயர்பாதுகாப்பையும் கேந்திர முக்கியத்துவத்தையும் கொண்டிருந்த கிளிநொச்சிப் படைத்தளத்தை தாக்கித் துடைத்தெறியும் இலக்குடன் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஓயாத அலைகள் - 02 தாக்குதல் நடவடிக்கையை 26ம் திகதி (செப்டெம்பர் மாதம்) தொடுத்திருந்தார்.

★★★

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பழையவாடி ஜெயசிக்குறுய் சமரின் போது புலிகளின் தற்காப்பு யுத்தத்தின் ஒருபகுதியான ஒரு சந்தியை மையமாக வைத்து சுற்றிவர தொடர் பதுங்கு குழிகளையும் அதில் இடைக்கிடையே காப்பரண்களையும் கொண்ட நிலைத்து நின்று தாக்கும் போர்முறையின் ஆரம்ப இடமான புளியங்குளத்தின் கிழக்கேயுள்ள கிராமம். தேவையான இடங்களில் தடுப்பு வலையங்களுடன் இருந்த, உட்புகமுடியாத புளியங்குளம் முகாமை உடைத்த சிங்களப் படைகளின் ஒரு படையணி பிரதான பாதையிலிருந்து விலகி பழைய வாடிப் பகுதிக்கு வந்து நிலையெடுத்து விட்டது. 19.03.1997 அன்று காலை மோதல் ஆரம்பமாகிவிட்டது. வெட்டையை அண்டிக் காணப்பட்ட அந்தக் கிழக்குப் பகுதிக் காப்பரணுள் மோட்டார் சூடுகளை நேர்த்தியாக்குவதற்கான வீரர்கள் நாம் என அழைக்கின்ற எமது மரபுவழிச் சமராயுதத்தின் முதுகெலும்புகளான அவர்களில் ஒருவன் நிலைமையை அவதானிப்பதற்காக தலையை வெளியே தூக்கியபோது, நன்றாக நிலையெடுத்திருந்த எதிரியொருவனின் துப்பாக்கியிலிருந்து சிறிய ரவையொன்று தலையில் பட்டுவிட வீரச்சாவடைந்து விட்டான்.

அவன் - கப்டன் சதாசிவம் (கந்தசாமி கிருபாகரன்) நேற்றுவரை எல்லோர் முன்னும் கலகலத்துத் திரிந்தவன் இன்று இல்லை. வெவ்வேறு பகுதிகளிலிருந்து வேறுபட்ட குணாம்சங்களுடன் வந்தவர்கள், முதன்முறையாக சந்தித்து ஒரு பொதுவான கொள்கையின் கீழ் அணி திரண்டு தம்மை அக்கொள்கைக்கு அமைவாக வளர்த்துக் கொள்கின்ற அந்த ஆரம்பப் பயிற்சி முகாம் வாழ்க்கையில் கூட சதாசிவம் வெகுசரளமாக எல்லோருடனும் கதைத்



கப்டன் சதாசிவம்

டது முல்லை முகாம் தாக்குதலிலே தான் அதன் பின் சத்ஜெய சமருக்குமோட்டார் எறிகணைகளின் அழுத்தித்திற்காக களமுனைக்குச் சென்ற சதாசிவத்தின் பங்கு பாரியது.

சத்ஜயவினைத் தடுத்து நிறுத்துவதில் மோட்டார்களும் பாரிய பங்கை வகித்திருந்ததாகத் தலைவர் அவர்கள் கூறியிருந்தார். இந்த மோட்டார்களைச் சரியான இலக்கு நோக்கிச் செயற்பட வைத்ததில் சதாசிவத்தின் பங்கு மிகப் பாரியதுதான்.

துப்பாக்கி கையிலிருக்கும் ஆனால் சுடமுடியாது. எமது எறிகணைகளுக்கான திருத்தத்தைச் சொல்லி மோட்டார்களை வழிப்படுத்தவே நேரம் சரியாக இருக்கும் பிறகு எப்படிச்சுடுவது. இத்தனைக்கும் மத்தியில் OP பார்ப்பதென்றால் சுலபமான வேலையில்லை.

எமது மோட்டார் பயிற்சிக்காலத்தில் OP பார்ப்பதற்கென பலர் முண்டியடித்தோம். எல்லோரும் களமுனையிலிருந்து சில மீற்றர்கள் தூரத்தில் நிற்க விரும்பினால் பொறுப்பாளரும் என்னதான் செய்வது? இறுதியில் அவர்பார்வையாலேயே தூரத்தைச் சரியாகக் கணிப்பவர்களைத் தெரிவு செய்தார். பல பரீட்சைகள், அதில் தெரிவானவர்களில் சதாசிவமும் ஒருவன். சத்ஜயவின் போதான முன்னனுபவம் இவனுக்கு இந்தப்போட்டியில் கை கொடுத்தது என்பது உண்மைதான்.

சதாசிவம் தனியே OP யாக மட்டும் செயற்படவில்லை. பரந்தன் - ஆனையிறவுச்சமரின்போது மோட்டாருடன் சென்றான். அதிலும் மோட்டார்களை இயக்குவதற்கு அத்தியாவசியமானவர்களில் இவனும் ஒருவனாகவே சென்றான். மோட்டார் இயக்குவது என்பதும் இலகுவான காரியமல்ல. அதாவது 120மில்லிமீற்றர் மோட்டார் சூட்டின்போது வெடிக்காத செல்லை வெளியே எடுப்பதாயினும் சரி, உடனடியாக இடமாற்ற வேண்டுமாயினும் சரி, அதற்கு படு வேகம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சுட்டுக் கொண்டிருக்கும் மோட்டாரின் நிறுதானமும் எதிரிக்கு காட்டிக்கொடுப்பதற்கான அவகாசத்தை வழங்கிவிடும். எமது அணிகளின் வேகமான நகர்திறனே வெற்றிக்கு அடிப்படை என பலரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். இவ்வணியில் அப்படியான தொரு வேகத்தைக் கொடுப்பவர்கள்

# ஓய்வறியாதவன் ஓய்ந்தபோது...!

துத் திரிவான். பயிற்சி ஆசிரியரைக் கூட தனது கலகலப்பான பேச்சாலும் நகைச்சுவையாற்றலாலும் கவர்ந்தவன் இந்தச் சதாசிவம்.

அது காட்டுக்குள் அமைக்கப்பட்டிருந்த எமது பாசறைகளில் ஒன்று. மோட்டார்களுடன் பயிற்சியும் விளையாட்டுமாக அந்தக் காடே கலகலத்துப் போனது. இப்போது ஜெயசிக்குறுவின் தலைவிதியின் ஒரு பகுதியைத் தீர்மானிக்கும் அந்த 120 மில்லிமீற்றர் மோட்டார்களுக்கான பயிற்சி எனும் போது நாவறண்டு களைத்து நாக்குத் தொங்கிவிடும். அதனைப் பகுதிபகுதியாகக் கழற்றி ஒரு பகுதியுள் சில மீற்றர் தூரம் நடப்பதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும். அதற்காக இருவர் தான் அதற்கும் வேண்டும். பிரதானமான ஆயுதம், புதிய பயிற்சி, பல்வேறு பிரிவுப் போராளிகள் எனும் போது பயிற்சியிலும் பாரிய போட்டி. எல்லோரையும் கலந்து அணிகள் பிரிக்கப்பட்டிருந்தாலும் தத்தமது அணிக்குள் ஒற்றுமைகண்டு விட்டுக்கொடுக்காது அந்த கனரக ஆயுதத்தினை இழுத்து ஓடி முன்னுக்கு வருவதற்கு எல்லோரதும் கடின உழைப்பிருக்கும் இப்பயிற்சி கடினமானதும் அபாயமானதும் கூட. இந்தக் கடும் பயிற்சியின் பின்னான சிறிது ஓய்வின் போது எம்மில் அநேகர் தரையில் விழுந்து படுத்துவிட சதாசிவம் மட்டும் களைப்பற்றவன்போல் ஏதாவது வேலையில் ஈடுபட்டிருப்பான்.

அலுக்காமல் சலிக்காமல் வேலைசெய்வது சதாசிவத்திடம் இருக்கும் பண்புகளில் ஒன்று. மோட்டாருக்கான பதுங்குகுழி வெட்டும்போது இவனும் சபேசனும் (கப்டன் சபேசன்) இணைந்தால் ஒரு பகுதியை முடித்துவிட்டுத்தான் ஓய்வு எடுப்பார்கள் அதுவும் மிக வேகமாகச் செயற்படுவார்கள் அதனாலே தான் நாங்கள் இருவருக்கும் சடார் மடார் என்று பெயர் சூட்டினோம். அதுவும் சடார் என்பது சதாசிவத்திற்கு பொருத்தமான பெயர்தான்.

கிளிநொச்சி தர்மபுரத்தைச்சேர்ந்த கந்தசாமி தம்பதிகளின் மூத்த புதல்வரான கிருபாகரன் 1995-இல் பயிற்சி முகாமில் தான் சதாசிவம் உருவானான். பயிற்சி முடித்து சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியுடன் சென்று கொக்குத்தொடுவாய் சமரே இவனது முதலாவது களம். இதன் பின் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்து பின் பண்டிதர் படையணியில் சேர்க்கப்பட்டு முகாமில் நின்ற வேளையில் தான் சத்ஜெய இராணுவ நடவடிக்கை தொடங்கியது விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் ஒரு தாக்குதலுக்கான பிரதான ஆயுதமாக 120 மிமீற்றர் மோட்டார் பாரிய அளவில் பயன் படுத்தப்பட்

- நா. குமார் -

அதாவது மறைமுகச் சுவடுகளை வழங்கும் இந்த கனரக ஆயுதங்களின் குறிகாட்டிகளே OP எனப்படுகின்றவர்கள். OP என்பது மிகக்கடினமான பணி. கூவிவரும் எதிரியின் எறிகணைகளுக்குள் எமது செல்லை அடையாளம் கண்டு, அது எந்த மோட்டாரகளால் ஏவப்பட்டது என்பதை நினைவில் வைத்து திருத்தம் சொல்ல வேண்டும் சிலவேளை ஒரு மோட்டாருக்கான திருத்தத்தை மாற்றி வேறு ஒன்றுக்கு அறிவித்து விட்டால், திருத்தி மீண்டும் ஏவப்படும் எறிகணை எம்மவர் தலையில்கூட விழலாம் அப்படியேதாவது நடந்தால் ரீம் காரரிடம் பேச்சுவாங்குவதிலேயே சீவன் போய்விடும்.

எதிரியின் எறிகணை மழைக்கிடையில் எமது எறிகணைகள் விழும் இடத்தைப்பார்ப்பதற்காக எதுவித காப்புமற்று எழுந்து நிற்க வேண்டிவரும். சிலவேளை மரத்திலும் ஏறவேண்டியிருக்கும். அப்போது பதுங்கி நிற்கும் எதிரி சுடுவதற்கிடையில் அந்தக் கணமே கீழே குதிப்பதுதான் உயிரிழப்பைத்தடுக்க உதவும்.



## போராளியின் குருதிச்சுடுகள்

அசாதாரணமானவர்கள்தான்.

ஒரு மோட்டாரின் செயற்பாட்டை சிறப்புறச் செய்பவன் OP யின்போது மிக இலகுவாகச் செயற்பட முடியும் என்பது நடைமுறையின் வெளிப்பாடு. இதனாலேதான் சதாசிவமும் சிறப்பாக எறிகணைகளுக்கான வழுத்திருத்தத்தைச் செய்தானபோலும்.

ஓமந்தையின் மீதான வலிந்த தாக்குதல் நடந்தன்று அன்றும் சதாசிவம் OP யாகவே சென்றான். திட்டமிட்டபடி இலக்கை அடையாத தாக்குதல் அது. மறுநாள் பகலிலேயே திரும்ப வேண்டி ஏற்பட்டுவிட்டது. எம்மிலும் கணிசமான அளவு இழப்பு. அன்று OP க்குப்போய் திரும்பிய சதாசிவம் என்னிடம் வந்து சரியாகப் பசிக்குது மச்சான் என்றான். அந்த விடியற்காலையில் சாப்பாட்டுக்கு எங்கு போவது? முதல்நாளைய இரவு உணவுதான் இருந்தது. இலேசாகப் புழித்துப்போயவிட்டது. ஆனாலும் இருவரும் அமர்ந்து உணவருந்திய போது எங்களிட்ட ஆட்கள் காணாது இருந்திருந்தால் பிடித்திருக்கலாம் என்றான் சதாசிவம். உண்மை தான் இப்படி எத்தனை சமர்களில் வெற்றியின் விளிம்பில் நின்றபோது ஆட்பற்றாக்குறையால் விட்டுவிட்டு வந்திருக்கிறோம். இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் எங்களிட்ட ஆட்கள் காணாது இருந்திருந்தால் பிடித்திருக்கலாம் என்று சொல்லித்திரியப்போகிறோம்.

சீனப் புரட்சியின் தந்தை மாவோ வகுத்தது போல் சிங்களப்படைகள் பெரும் எடுப்பில் முன்னேறி எமது வாழ்விடங்களைக் கைப்பற்றியுள்ளது. பின் கைப்பற்றிய இடங்களைத் தக்க வைக்கவும் தற்காப்பு நிலையில் நின்று அங்கொரு பொம்மை அரசை நிறுவ முனையும்போது நாம் நகர்வுப்போர் முறையாலும் கரந்துறைத் தாக்குதலாலும் நிலைத்து நின்று தாக்கும் யுத்த முறையாலும் வலிந்த தாக்குதலாலும் எதிரியை இடைவிடாது தொல்லைப்படுத்தி வருகிறோம். ஆனால் இறுதிக்கட்டமான எதிரியை நாம் முன்னேறித் தாக்கி விட்டு இடங்களைக் கைப்பற்றும் காலகட்டத்துள் நுழைந்துவிட்ட எமக்குள்ள பெரியகுறை இந்த ஆட்பற்றாக்குறை. நாம் முன்னேறித் தாக்கும் போர்த் தந்திர முறைமூலம் இழந்த எமது தேசத்தை மீட்கவும் எதிரியை துவசம் செய்து விரட்டவும் தருணம் வாய்த்துள்ள நிலையில் காலம் எம்மிடம் வெற்றிப்பாதைக்கான வழியைச் சுட்டி நிற்கும் வேளையில் சதாசிவம் போன்ற இன்னும் எத்தனையோ மாவீரர்களின் உன்னத எதிர்பார்ப்புகளுக்கு தமிழ்ச்சமுதாயம் கொடுக்கப்போகும் மறுமொழி எதுவாக இருக்கப்போகிறது?'

(நன்றி 'விடுதலைப் புலிகள்')

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 19

எங்களுக்குக் கீழே உயரமான கரையில் மணல் மேடு. உயரம் 150 மீட்டர். தரையிலிருந்து விமானத்தை நோக்கிச்சுட ஆரம்பித்தனர். கீழே மேடும் பள்ளமுமான இருண்ட தரைப்பரப்பு. சாக்குப் பைகளைப் போட வேண்டும். நேவிகேட்டர் பட்டனை அழுத்துகிறான். பாரம் கீழிறங்கியதும் விமானம் சற்றே குதித்து மேலெழும்புகிறது. நான் உயரத்தைக் குறைக்கிறேன். நாங்கள் எங்களுடைய துருப்புகளுக்கு மேலாகப் பறக்கின்றோம். உயரம் எவ்வளவுக்கெவ்வளவு குறைவோ அவ்வளவுக்கவ்வளவு எதிரிக்கு எங்களைத் தாக்குவது கடினம். நாங்கள் வோல்காவை நோக்கிப் பறக்கிறோம். நேவிகேட்டரோ எல்லாவற்றையும் மறந்துவிட்டு, நெருப்பொளியின் பின்னணியில் நன்கு தெரியும் இரண்டு வெண்ணிற பாரசூட்களையே கண்ணிமைக்காமல் பார்க்கிறான். அவை ஒன்றன் பின் ஒன்றாக, மணல் மேட்டிற்கு அருகே உயரமான கரையில், மேடு பள்ளமான தரையில் விழுகின்றன. 'அப்படித்தான், 100 மீட்டர் உயரத்திலிருந்து கீழே போட வேண்டும்' என்ற நேவிகேட்டரின் குரல் கேட்கிறது.

விமானம் செங்குத்தான கரைக்கு மேலாகப் பறக்கிறது. எங்கள் முன்னால் பரந்த வோல்கா நீர்ப்பரப்பு. விமானத்தின் உயரத்தைக் குறைத்து, உயரமான கரையிலிருந்து கீழேயுள்ள நீர்ப்பரப்பு வரை வந்து தாழப் பறக்க விரும்பினேன். அப்போது தாக்கு

மனையின் பக்கவாட்டுப் பகுதி முடியும் இடத்திலிருந்து கிடைமட்டத்தில் பல குண்டுகள் ஒன்றாகச் சீறிக் கொண்டு வந்தன. பாசிஸ்டுகள் வோல்காவை நோக்கிச் சுட்டனர். என்ன அது? எங்கு சுடுகின்றனர்? ஏன் சுடுகின்றனர்?! இருண்ட நீர்ப்பரப்பிலிருந்து ஒரு விமானம் மேலெழும்பியது.

அது தாழப் பறந்தபோது மூன்று தீக்கணப்புகளுக்கு நேர் மேலே வந்தது. கரையின் வெண்ணிற மண்டலத்தில் மின்னிய அது உடனேயே இருண்ட இடத்தில் மறைந்தது. அத்தருணத்தில் இரண்டு வெண்ணிற பாரசூட்டுகள் விரிந்து, உடனேயே தீக்கணப்புகளுக்கு இடையில் மறைந்தன.

'அட தாழப்பறந்து, சாக்குப் பைகளைக் கீழே போட்டிருக்கின்றனர்! யார் அது?" என்று நேவிகேட்டரைக் கேட்கிறேன்...

இது விமானி வரபியோவ், அவருடைய நேவிகேட்டர் சஃபோனவ், ஆகியோரின் சுடிதம்.

வோல்காவிலோ பனிக்கட்டிகள் சென்று கொண்டேயிருந்தன. ஒவ்வொரு இரவும் ரு-2 ரக விமானங்களில் விமானிகள் 2-3 முறை வோல்காவைக் கடந்து பறந்துவந்து, எங்களுக்குச் சரக்குகளை வீசினர். ஆயுதத் தளபாடங்களும் மருந்துகளும் உணவுப் பொருட்களும் மெதுவாக பாரசூட்டுகளில் தீக்கணப்புகளருகே வந்து இறங்கின.

விமானங்கள் குண்டு துளைத்த ஓட்டைகளுடன் விமானத்தளங்களுக்குத் திரும்பின. அவை உடனடியாகப் பழுது பார்க்கப்பட்டு இரவுப் பயணத்திற்கு மீண்டும் தயாராயின. விமானிகள் குறி தவறா வீரர்களைப் போல் சரக்குகளைத் துல்லியமாக வீசினர்.

1942ஆம் ஆண்டின் கோடைத் தாக்குதலில் எதிரியின் வான் பலம் விஞ்சியிருந்தது. ஆகஸ்டு 15 வாக்கில் பாசிஸ்டுகள் ஸ்டாலின்கிராட் திசையில் 1,200 போர் விமானங்கள் வரை குவித்திருந்தனர். இது ஒரு பெரும் சக்தியாக இருந்தது. இவ்விமானங்களின் தாக்குதல்களை எதிர்த்து முறியடித்ததில் வான் எதிர்ப்பு பாதுகாப்பு துருப்புகள் பெரும் பங்காற்றின.

ஜூலை - நவம்பரில், சோவியத் - ஜெர்மானியப் போர்முனை பூராவும் வான் எதிர்ப்பு பாதுகாப்பு துருப்புகளின் செயல்முறை எல்லைகளினூடாக பாசிஸ்டுகள் 1,33,000 விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஸ்டாலின்கிராட் வான் எதிர்ப்பு பாதுகாப்பு கோர்ப்ஸ் மட்டும் 66,000 தாக்குதல்களை - அதாவது மேற்கூறிய எண்ணிக்கையில் கிட்டத்தட்ட பாதியை எதிர்த்து முறியடித்தது.

சில நேரங்களில் புள்ளி விபரங்கள் வார்த்தைகளை விட அற்புதமாக விடயத்தை விளக்கும். எதிரியின் விமானத் தாக்குதல்களின் எண்ணிக்கை பெருகியதிலிருந்து ஸ்டாலின்கிராட் அருகிலும் ஸ்டாலின்கிராடிலும் சண்டைகளின் உக்கிரம் அதிகரித்ததையும் அறியலாம். ஸ்டாலின்கிராட் திசையில் ஜூலையில் 2,425 விமானத் தாக்குதல்களும், ஆகஸ்ட்டில் 14,018 தாக்குதல்களும், செப்டெம்பரில் 16,754 தாக்குதல்களும், அக்டோபரில் 25,229 தாக்குதல்களும், நவம்பரில் 7,575 தாக்குதல்களும் தொடுக்கப்பட்டன.

ஸ்டாலின் கிராட்டின் வான் எதிர்ப்பு பாதுகாப்பு, ஸ்டாலின் கிராட் வான் எதிர்ப்பு பாதுகாப்பு கோர்பஸ், சேனைகள் மற்றும் படைகளின் வான் எதிர்ப்பு பாதுகாப்பு பிரிவுகள் ஆகியவற்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய கோர்ப்ஸில் 102வது சண்டை விமான டிவிசன் அடங்கியிருந்தது. இதன் வசம் 60 சண்டை விமானங்கள், 506 விமான எதிர்ப்பு பீரங்கிகள், 470 விமான எதிர்ப்பு இயந்திர பீரங்கிகள், 163 விமான எதிர்ப்பு தேடு விளக்குகள், 81 குண்டு தடுப்பு பலூன்கள் ஆகியவையிருந்தன.

நகரத்தில் டிராக்டர் தொழிற்சாலை, "பாரிக்காதி" மற்றும் "கிராஸ்னி அக்தியாபர்" தொழிற்சாலைகள், நீர்மின்நிலையம், எண்ணெய் கிடங்கு, பெக்கேத்தவ்கா என்ற இடம், கிராஸ்னா அர்மேய்ஸ்க் இடம் ஆகிய முக்கிய இடங்களைச் சுற்றி விமான எதிர்ப்பு பீரங்கிகள் முழு தற்காப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தன.

ஆகஸ்டு 23ஆம் தேதிதான் பாசிச விமானங்கள் முதல் மிகப் பெரும் தாக்குதலைத் தொடுத்தன. இது நகரத்தின் மீதான பொதுத் தாக்குதலுக்கு முன், எங்களுடைய விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் துருப்புகளையும் அடக்குவதற்காக, நகரத்தை முழுமையாக அழிப்பதற்காகத் தொடுக்கப்பட்ட தாக்குதலாயிருந்தது. ஸ்டாலின்கிராட்டின் மீதிருந்த வானத்தில் பாசிச குண்டு வீச்சு விமானங்கள் இடையறாமல் வட்டமடித்தன. அதே நேரத்தில் பாவுலுசின் துருப்புகள் வொர்தியாச்சிய் வழியே வட கோடியை நோக்கியும், கோட் தலைமையிலான துருப்புகள் தெற்குப் புறநகர் பகுதிகளை நோக்கியும் பாய்ந்தன.

எதிரி விமானங்கள் 10-15ஆக சேர்ந்து வந்து டிராக்டர் தொழிற்சாலை மீது கிட்டத்தட்ட இடைவெளியின்றி குண்டு மழை பொழிந்தன. நடுப்பகலுக்குப் பின் 400க்கும் மேற்பட்ட குண்டு வீச்சு விமானங்கள் சண்டை விமானங்களின் பாதுகாப்போடு வந்து, நகரத்தின் மத்திய, தென் பகுதிகள் மீது குண்டு வீசின.

நகரத்தின் மேல் புழுதியும் புகை மூட்டமும் தீ நாக்குகளும் வானுயர எழுந்தன. தொழிற்சாலைப் பிரிவுகள், வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள், கண்காட்சிக் கூடங்கள், கலையரங்கங்கள் எல்லாம் இடிந்து விழுந்தன. கடவுத்துறைகளும் எண்ணெய் கிடங்குகளும் மரத்தாலான அமைப்புகளும் தீப்பற்றி எரிந்தன. இடிபாடுகளிலும் நெருப்பிலும் நூற்றுக்கணக்கான பாமர மக்கள் மாண்டனர். எதிரி ஸ்டாலின்கிராட் நகரத்தையே தரைமட்டமாக்க விரும்பினான். இரவில் வானம் முழுவதும் தீப்பிழம்புகளின் ஒளியால் சிவந்திருந்தது.

அன்றையதினம் ஸ்டாலின்கிராட் பிரதேசத்தில் 120 எதிரி விமானங்கள் வீழ்த்தப்பட்டன. விமானங்களின் எண்ணிக்கையில் எதிரி விஞ்சிநின்ற போதிலும் எங்களுடைய விமானிகளும் 25க்கும் மேற்பட்ட கூட்டு வான் சண்டைகளில் பங்கேற்றனர். மறுநாளும் நிலவரம் மேம்படவில்லை. நவம்பர் 19ஆம் தேதி தென்மேற்கு மற்றும் தோன் சேனைகளின் துருப்புகள் உறுதியான எதிர்த்தாக்குதலில் இறங்கும் வரை நிலவரம் சீரடையவில்லை. எதிரியின் விமானத் தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்ததே இதற்குச் சான்று.

செப்டெம்பரில் விமான எதிர்ப்புப் பீரங்கிகளின் கவலைகள் கூடின. வோல்கா ஆற்றைக் கடக்கும் வழிகளுக்கும் பாதுகாப்பளித்து, பேட்டரிகளில் ஒரு பகுதியை கிழக்குக் கரைக்கு இடம் மாற்ற வேண்டி வந்தது.

நகரத்தில் சண்டைகளின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க விமான எதிர்ப்பு பீரங்கி வீரர்களின் நிலைகள் நகரத்தின் தற்காப்பு நிலைகளாயின.

ஆகஸ்டு 23ஆம் தேதி, எதிரியின் 14வது டாங்கி கோர்பஸ் லதோஷிங்கா பகுதியில் வோல்காவை அடைந்தபோது, விமான எதிர்ப்புப் பீரங்கி வீரர்கள் டாங்கி தாக்குதலை முறியடிக்கும்படி நேரிட்டது. லெப்டினன்ட் கர்னல் வி. என். கேர்மன் தலைமையிலான 1077வது விமான எதிர்ப்புப் பீரங்கிப்படை ரெஜிமென்டின் பேட்டரிகள் ஆகஸ்டு 23, 24 தேதிகளில் நடந்த சண்டைகளில் வோல்காவை நோக்கி வந்த சுமார் 80 டாங்கிகளை அழித்தன. காலாட்



மார்ஷல் சுய்க்கோவ்

படைவீரருடன் வந்த 15 டாங்கிகளை ஒழித்துக்கட்டின, 14 விமானங்களை வீழ்த்தின.

ஸ்டாலின்கிராட்டில் சண்டைகள் ஆரம்பமாயின. விமான எதிர்ப்பு பீரங்கி வீரர்கள் செயல்படுவதற்கான சூழ்நிலைகள் சிக்கலாயின. எதிரி விமானங்கள் மேற்கு, தெற்கு, பின் வடக்குத் திசைகளிலிருந்து நகரத்தை நோக்கி வரும்போது அவற்றைக் கவனிக்கும் வான் கண்காணிப்பு மையங்களின் கண்காணிப்பு மண்டலங்களின் தூரம் ஒரு சில கிலோமீட்டர்கள் வரை குறைந்தது. விமான எதிர்ப்பு சாதனங்களின் போர் வரிசைகளின் ஆழம் 5 - 10 கிலோமீட்டர்களுக்கு மேற்படாமலிருந்தது. அதே நேரத்தில் இச்சாதனங்கள் போர் முனையில் 60-70 கி. மீ. வரை நீண்டிருந்தன. ஒரே மையத்திலிருந்து இதை நிர்வகிப்பது இயலாததாயிருந்தது. எதிரி விமானங்கள் எங்கள் துருப்புகளை நெருங்கிய பின்தான் அவற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவற்றின் வருகையை விமான எதிர்ப்பு பீரங்கி வீரர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்க ஒருவரும் இருக்கவில்லை.

செப்டெம்பரில் எதிரி வோல்கா ஆற்றைக் கடக்கும் வழிகள் மீது விசேட கவனம் செலுத்தினான். கடவுத்துறைகள், நீராவிப்படகுகள், இழுவைப்படகுகள், தோணிகள் ஆகியவற்றின் மீதான விமானத் தாக்குதல்களை முறியடிப்பதற்காக விசேட விமான எதிர்ப்பு பீரங்கி பேட்டரிகளை அடக்க எதிரி பெரிதும் பாடுபட்டான். ஸ்டாலின்கிராட்டின் மீது எதிரி போட்ட குண்டுகளில் மூன்றிலொரு பகுதி விமான எதிர்ப்பு பீரங்கி வீரர்களின் மீது போடப்பட்டவையாகும். தம் தலைமீது விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் போது, குண்டுகள் மழையெனப் பொழியும் போது மனத் தளர்ச்சியடையாதிருப்பது அவ்வளவு எளிதல்ல. ஒரு நொடி கூட நிற்காமல் சுடுவதுதான் தப்பிப்பதற்கான ஒரே வழியாகும். விமான எதிர்ப்பு பீரங்கி வீரர்கள் தாம் நெஞ்சுறுதியும் ஆண்மையும் மிக்க வீரர்களென மெய்ப்பித்தனர்.

இடது கரையுடன் நிலவிய இடையறா தொடர்புகளின்றி ஸ்டாலின்கிராட்டின் பாதுகாப்பு இயலாமல் போயிருக்கும். அங்கிருந்துதான் ஆயுதத் தளபாடங்களும், உணவுப் பொருட்களும், போரை நடத்தத் தேவையான மற்ற எல்லா சாதனங்களும் வந்தன.

பல்வேறு நோக்கங்களில் வோல்காவின் வலது கரை இடது கரையுடன் மூன்று மார்க்கங்களால் இணைக்கப்பட்டிருந்தது.

(தொடரும்)

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive




## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்திஐந்து

டொவ் மேசையின் அருகில் நின்றபடி வரிசையில் வரும் ஆட்கள்தன்னை நோக்கி வருவதை பார்த்துக் கொண்டிருந்தான். நிமிடத்திற்கு நான்கு மரணத்துக்கு அனுப்பப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

டொவ் காவலர்களின் கண்களைப் பார்த்தான், அவர்கள் கையிலிருந்த குண்டாந் தடிகளைப் பார்த்தான். அவர்களின் உறுமிக் கொண்டிருந்த நாய்களையும் பார்த்தான். வலதுபக்க வழியைப் பார்த்தபடியே நடுங்கும் அரைகுறைக் குரலில் சீட்டியடித்துக் கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடங்கள் சென்றன. பத்து நிமிடங்கள் கடந்தன மேடையிலிருந்து உள்ளே வரும் வரிசைகள் முடிவேயில்லாமல் தொடர்ந்துகொண்டிருந்தன.

போன காவலன் வேறொரு மனிதனுடன் திரும்பி வந்து கொண்டிருந்தான். அவன் ஒரு உயர்தர அதிகாரியாக இருக்க வேண்டுமென டொவ் தீர்மானித்தான். ஏனெனில் அவன் மார்பு முழுவதும் ஏராளமான பதக்கங்கள் அணிந்திருந்தான். வைத்தியன் அந்தக் கையெழுத்துக்கள் இருந்த கடதாசிக் கட்டை இவனிடம் கையளிக்க ஒரு முழு நேரத்துக்கு அதை அவன் பார்வையிட்டான்.

இதை எங்கே பழகினாய்? அதிகார கேள்வி வந்தது.

வார்சோவின் சேரியிலே.

என்னவிதமான வேலைகள் நீ செய்தாய்?

கடவைச்சீட்டுக்கள், பிரயாண அட்டைகள், எப்படியான ஆவணமும் செய்வேன். எனக்கு எதையும் பிரதி பண்ணமுடியும்.

எனக்குப் பின்னால் வா

டொவ் இடதுபக்க கதவால், வெளியே போனான். அவன் கால் ஏறி, ஒக்விற்ச் பிரதான முகாமை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது. லண்டங்களில் யாராவது இப்பிரச்சனைகள் . ஊடாக உயிர் வாழ வேண்டும் என கண்டெக் சொன்னது நினைவில் நிழலாடியது. சில கணங்களில் ஒக்விற்சின் பிரதான நுழைவாயிலைத் தாண்டிச் சென்றது. அந்த முகாமின் பிரதான வாயில் மேல் இருந்த அறிவிப்புப் பலகை உழைப்பு விடுதலைதரும் என்றது.

முகாமின் பிரதான பகுதியைச் சூழ இருந்த பகுதிகள் சேற்றில் ஆழ்ந்திருந்தன.உயர்ந்த மின்சாரம் பாச்சப்பட்ட முட்கம்பி வேலிகளால் பிரிக்கப்பட்டிருந்த மரத்தாலான ஒரு ஏக்கர்வரை விஸ்தீரணமான வாழ்விடங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்தன.

இப்படியான ஒரு ஏக்கர் விஸ்தீரணமான வாழ்விடங்களில் இருந்தவர்கள், முகாமின் உப பிரிவுகளை முப்பதுக்கு மேற்பட்ட கட்டாய வேலை முகாம்களின் மனிதவலுத் தேவையைப் பூர்த்தி செய்து வந்தனர். கறுப்பு - வெள்ளைக் கோடுகளான சீருடையும், கைகளிலும், இடது மார்பிலும், ஒரு வர்ண அடையாளப் பட்டையும் ஒவ்வொரு கைதியும் அணிந்திருந்தனர். தன்னினச் சேர்க்கையாளர்கள் இளஞ்சிவப்பு மை) வர்ணப் பட்டையை அணிந்திருந்தனர். கறுப்புப் பட்டைகள் போர்க்கள விபச்சாரிகளாலும், பச்சை வர்ண பட்டைகள் குற்றவாளிகளாலும், ஊதாநிற பட்டைகள் மதகுருமாராலும், சிவப்பு நிற பட்டைகள் ரஷ்யர்களாலும், போலந்துக்காரர்களாலும், பாரம்பரிய ஸ்டார் ஒவ் டேவிட் யூதர்களாலும் அணியப்பட்டு வந்தன.

டொவ் ஒச்விற்சில் இன்னொரு பட்டையைப் பெற்றுக் கொண்டான். அவன் இடது மணிக்கட்டில் பச்சை குத்தப்பட்ட ஒரு இலக்கமே அது. டொவ் லண்டவ் இப்போது கறுப்பு - வெள்ளை கோட்டு உடையணிந்த 359195 இலக்கத்தைக் கொண்ட ஒரு யூதனாக மட்டும் மாற்றப்பட்டான்.


உழைப்பு விடுதலை தரும். டொவ் பதினாலாவது பிறந்தநாளை ஒக்விற்சில் கொண்டாடினான். அவனுக்கு பிறந்தநாள் பரிசாக அவனது உயிர் தான் கிடைத்திருந்தது.

அம்முகாமில் இருந்த ஆயிரக் கணக்கானவர்களில், டொவ் அதிர்ஷ்டம் செய்தவனானான். ஏனெனில் அவன் இருந்த சிறிய போலி ஆவணத் தயாரிப்பாளர் குழுவினர் ... விசேட இடமொன்றைப் பெற்றிருந்தனர். அவனது குழுவினருக்கு மேற்கு நாடுகளில் தங்கள் முகவர்களால் பாவிக்கப்படுவதற்காக, அமெரிக்க ஒரு டொலர், ஐந்து டொலர் நோட்டுக்களைப் போலியாகத் தயாரித்து அச்சிடும் வேலை கொடுக்கப்பட்டிருந்தது. ஒச்விற்சில் சிறிது காலம் இருந்தபின், டொவ்வுக்குப் போர்கினொவிலேயே செத்துத் தொலைத்திருக்கலாம் என்று தோன்றியது. இங்கே அரைகுரை உணவு வழங்கப்பட்டு வாழும் எலும்புக் கூடுகளின் நிலைக்கு வேலை செய்விப்பதன்மூலம் தள்ளப்பட்டு, ஐந்து மணி நேர தூக்கத்திற்காகத் தட்டுக்களில் அடுக்கப்பட்டு வாழ்ந்து வந்தார்கள். நோய்கள் தாராளமாகப் பீடித்தன. கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டனர். பைத்தியமாக்கப்பட்டனர். அடித்து உதைக்கப்பட்டனர். சிறுமைப்படுத்தப்பட்டனர். மொத்தமாகச் சொல்லப்போனால், மனிதனால் கண்டு பிடிக்கப்படக்கூடிய சகலவிதமான கொடுமைகளும் அங்கே நிகழ்த்தப்பட்டன.

இங்கே ஒவ்வொரு காலையிலும், தங்களுடைய சொந்த இடுப்புப் பட்டிகளாலேயே தூக்குப் போட்டுக் கொண்டும், முள்ளுக்கம்பிகளில் பாச்சப்பட்டிருக்கும் மின்சாரத்தின் இரக்கத்தால் தங்களைத் தாங்களே அவற்றில் வீசிக்கொண்டும் இறந்து போய்விட்ட டசின் கணக்கான கைதிகளைக் கண்டது, கசையடி மண்டபங்கள் தொடர் பாவனையில் இருந்ததோடு, பெயர் கூப்பிட்டுச் சரிபார்க்கும் வேளையில் பெண்களின் முதுகுப் புறங்களில் கசைகள் விளையாடும், அதுவும் பகிரங்கமாக நடக்கும்.

இங்குதான் குற்றவாளிகளைக் கொண்ட குழுக்கள் தனியான கறுப்பு நிற சிறைக்கூடங்களில் வைத்துத் தணிக்க முடியாத தாகத்தை ஏற்படுத்தும் நோக்கில் உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட மரக்கறிகள் உணவாக வழங்கப்பட்டன.

இங்குதான எக்ஸ் பிரிவில் நாசி வைத்தியர்களான வேர்த், சூமான், கிளாபேர்க. ஆகியோர் விஞ்ஞான ஆராய்ச்சி என்ற பெயரில் போலிப் பரிசோதனைகளுக்கான மனிதமூலப் பொருட்களை வைத்திருந்தனர். போலந்துக் கைதியான டாக்டர் விளடிஸ்லோ டெரிங் தன் ஜெர்மனிய எஜமானர்களின் உத்தரவுப்படி மலடாக்கல், கருப்பை நீக்குதல் சத்திர சிகிச்சைகளை நடத்தினான். இது முழு யூத இனத்தையும் மலடாக்கிவிடும் வழிகளைக் கண்டறிய அவர்கள் எடுத்துக் கொண்ட பைத்தியக் காரத்தனமான முயற்சிகளின் பகுதியாக விளங்கியது.



இதுதான் ஒச்விற்ஸ், இதுதான் வாழ்க்கை, டொவ் லண்டாவிற்கு அளித்த பரிசு. உழைப்பு விடுதலை தரும்.

லண்டவ்களில் யாராவது இப் பிரச்சினைகளின் ஊடாக உயிர்வாழ வேண்டும் என மண்டெக் கூறியிருந்தான். மண்டெக் எப்படியிருப்பான்? இப்போதெல்லாம் அவனை ஞாபகப்படுத்திக் கொள்ள முடிவதே ... றுத் றெபேக்கா அல்லது அவன் தாயார் இல்லை, எவரையுமே முடியவில்லை. தந்தையைச் சிறிதளவு கூட ஞாபகப்படுத்திக் கொள்ள முடியவில்லை. நினைவுகள் மங்கி மங்கிப்போய், இப்போதெல்லாம் சாவையும் பயங்கரத்தையும் தவிர எதையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியாதபடி போய்விட்டது. சாவுக்கும் பயங்கரத்துக்கும் அப்பால் வாழ்வு ஒன்று உள்ளதென்று கூட அவனுக்குத் தெரியாது.

ஒரு வருடம் கடந்தது. போர்கினோவுக்கு உள்ளேயும், வெளியேயும் புகையிரதங்கள் வந்திருந்தன. ஒச்விற்சை சுற்றியிருந்த கட்டாயவேலை முகாம்களில் நிகழ்ந்து கொண்டிருந்த சித்திரவதை மரணங்கள் நோய் - பட்டினி ஆகியவற்றிலான மரணங்களும் போர்கினோவின் மரணங்களும் சற்றும் சளைத்த அளவில் இருக்கவில்லை. எப்படியோ அவன் சுய அறிவையும், உயிர் வாழத் தேவையான தப்பிப் பிழைக்கும் உள்ளுணர்வையும் காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்தான்.

**- லியோன் யூறிஸ் -**

கருமையான இந்தப் பாதாளங்களில் கூட, நம்பிக்கையின் ஒளிக் கீற்றுக்கள் இடைக்கிடை ஒளிர்ந்தன. சிறைக் கைதிகளின் இசைக் குழுவொன்று இருந்தது. தலைமறைவு இயக்கம் ஒன்றும் வளர்ந்து வந்தது. அவர்களிடம் ஒரு வானொலிக் கருவியும் இருந்தது. இங்கேகூட ஒரு மனிதன் தேவையானால் ஒரு பெண்ணை அனுபவிக்க வழி வகைகள் இருந்தன.

**முதுவேனிற் காலம் 1944**

ஒச்விற்ஸ் ஊடாக இப்போதெல்லாம் புதுவிதமான உணர்வலைகளின் அதிர்ச்சியை டொவ் உணர்ந்தான். டொவ நிமிர்ந்து வானத்தைப் பார்க்கும் சில சமயங்களில் ரஸ்ய குண்டுவீச்சு விமானங்களைக் காணக் கூடியதாக இருந்ததோடு, இரகசிய வானொலியும், ஜெர்மனியரின் தோல்விகளைப் பற்றிய செய்திகளை அறிவிக்கத் தொடங்கியிருந்தது. சேறினூடேயும், சித்திரவதையினூடேயும், நம்பிக்கை எவ்வளவுதான மங்கலாக இருந்தாலும் அவர்களை வந்தடைந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நேச நாடுகளின் வெற்றியும் ஜெர்மன் தோல்விகளைக் கேட்டுக் கைதிகள் நடுங்கும் அளவுக்கு, ஜெர்மன் காவலர்களை கொலைகாரத்தனமான வெறியாட்டங்களில் ஈடுபட வைத்தது. போர்கினோவில் நடவடிக்கைகள், விஷவாயுதக் கூடங்கள் தொடர்ந்து இருபத்தினாலு மணித்தியாலங்களும் இயங்கும் அளவிற்கு அதிகரிக்கப்பட்டன.

**கார்காலம் 1944**

ஜெர்மனி யுத்தத்தில் தோற்றுப் போகப்போகிறது. என்ற உணர்வலைகள் இப்போ வீசத் தொடங்கின. எல்லா முனைகளிலும் அவர்கள் தோற்கடிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். யுத்த களங்களில் தோல்விகளைச் சந்திக்கச் சந்திக்கப் பூண்டோடழிக்கும் அவா வளர்ந்து கொண்டிருந்தது. கேணல் ஈச்மன், கிடைக்கக் கூடிய எல்லா வளங்களையும், தனது இனப்படுகொலை முயற்சியை முற்று முழுதாகப் பாவித்தான்.

**ஐப்பசி 1944**

போர்கினோவில் சொண்டர் கொமாண்டோஸ் ஒரு புரட்சியை நிகழ்த்தினார்கள். இதில் ஒரு எரிகூடம் தகர்க்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் புதிய புதிய எழுச்சிகளில் சொண்டர் கொமாண்டோஸ் தங்கள் எஸ் எஸ் காவலர்களையும், அவர்களது நாய்களையும் எரிகூடங்களில் பிடித்துத் தள்ளத்தொடங்கினர். கடைசியாக இருந்த எல்லா சொண்டர் கொமாண்டோசும் கொல்லப்பட்டு புதியவர்களுக்கான அழைப்பு ஒச்விற்சுக்கு விடுக்கப்பட்டது.

இறுதிக் கட்டத்தில் நின்றுகொண்டிருந்த ஈச்மன் இறுதி நடவடிக்கை ஒன்றை எடுத்தான். செக்கோஸ்லாவாக்கியாவின் தெரசியன்ஸ்டாட் முகாமில் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த யூதர்களில், வடித்தெடுக்கப்பட்ட திறமைசாலிகளான 20.000 பேர், கொல்லப்படுவதற்காக, போர்கினோவிற்கு மாற்றிவிட உத்தரவிடப்பட்டது.

தொடரும்...

# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தி தமிழீழ மக்கள் எதனைக் கேட்கின்றார்கள்? எதற்காகப் போராடுகின்றார்கள்? என்ற அடிப்படையான கேள்விக்கு ஆணித்தரமான பதிலாக அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் எதைக் கேட்கின்றார்கள் என்ற கேள்விக்கு தமிழ் மக்கள் அவர்களுடைய பிரிக்க முடியாத உரிமைகளை விட வேறு எதனையுமே கேட்கவில்லை. இதனால் அரசியல் நீதி என்பது அவர்கள் பக்கமே உண்டு எனப் பதிலளித்துள்ள தமிழீழத் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அதனை பின்வருமாறு தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.. நாம் எமது மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்குச் சொந்தமான நிலத்தில், நாம் பிறந்து வளர்ந்த தாயக பூமியில்நாம் நிம்மதியாக, கௌரவமாக, எவரது தலையீடுமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு விரும்புகின்றோம். நாமும் மனிதர்கள். மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கொண்ட ஒரு மனித சமுகம். தனித்துவமான மொழியையும், பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு தனித்துவமான இனத்தைச் சார்ந்த மனிதர்கள் நாம். எம்மை ஒரு மனித சமுகமாக, தனித்துவப் பண்புகளைக் கொண்ட மக்களாக ஏற்குமாறு கேட்கின்றோம். எமது அரசியல் வாழ்வை நாமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை எமக்குண்டு. இந்த உரிமையின் அடிப்படையில் நாமே எம்மை ஆளும் வகையில் ஒரு ஆட்சிமுறையை அமைத்து வாழவே நாம் விரும்புகின்றோம்.

இதுவே தமிழ் மக்கள் கேட்பது என்பதை - எடுத்து விளக்கிய நம் தமிழீழத் தேசத்தலைவர் மேதகு பிரபாகரன் அடுத்து ஏன் இந்தப் போராட்டம் என்பதையும் பின்வருமாறு எடுத்து கூறுகின்றார். இந்த நியாயமான நாகரீகமான கோரிக்கையை சிங்கள தேசம் மறுத்து வருகிறது. கடுமையாக எதிர்த்து வருகிறது. இந்த நீதியான வேண்டுகோளுக்காகச் சிங்கள ஆட்சியதிகாரம் எமது மக்களைத் துன்புறுத்தி வருகிறது. கொடுமைப் படுத்தி கொன்றழித்து வருகிறது. எமது மக்களை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பாமல், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக் கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவே தான் அன்று தொட்டு இன்று வரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப, எமது போராட்ட வடிவங்கள் மாறியபோதும், எமது உரிமைகளுக்கான, எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப்போராட்டம் வளர்ந்து விரிந்து, இன்று இரு தேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது.

இவ்வாறு ஏன் இந்தப் போராட்டம் என்பதை எடுத்து விளக்கிய தமிழீழத் தேசத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் தமிழர் தேசம் போரையும் வன்முறையையும் விரும்பவில்லை என்பதை எடுத்து விளக்கத் தவறவில்லை. அமைதி வழியில், அகிம்சை வழியில், தர்மத்தை வேண்டி நின்ற எமது மக்கள் மீது வன்முறையைத் திணித்தவர்கள் யார்? நாம் எமது உயிரையும் உடைமையையும் பாதுகாக்க ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலையை உருவாக்கி விட்டவர்கள் யார்? சிங்களப் பௌத்த தீவிரவாதமே தமிழர்களை ஆயுத பாணிகளாக்கி தேச சுதந்திரப் போராட்டத்தில் குதிக்க வைத்தது - என்பது அவரது விளக்கம்.

சந்திரிகாவால் எத்தனையோ கற்பனைகளுடனும் அரசியற் கனவுகளுடனும் ஆரம்பிக்கப்பட்ட போர்த்திட்டத்தின் தோல்வியையும் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளை வேரோடு சாய்க்கவெனத் தொடங்கிய இந்த போர் விடுதலைப்புலிகளை வேரூன்றிய பெருவிருட்சமாக வளர்த்து அவர்களுக்கு எத்தகைய பலம் கொண்ட சக்தியாலும் அவர்களை வென்று விட முடியாது என்ற மனோதிடத்தை அளித்துள்ளதும் அல்லாமல் வற்றிப் போய்க்கிடந்த அவர்களின் ஆயுதக்களஞ்சியங்களைப் பெருமளவில் நிரப்பி அவர்களை இந்தப் போர் பலவழிகளில் பலப்படுத்தியுள்ளது என்பது தமிழீழத் தேசத் தலைவரால் சுட்டிக்காட்டப்பட்டமை சிங்கள பௌத்த பேரினவாத்தின் உண்மைக்கு மாறான பிரச்சாரங்களைத் தவிடுபொடியாக்கி உள்ளது.

பூகம்பமாக வெடித்த வன்னிச் சமர்களில் சிங்களத்துச் சேனைகள் சந்தித்த பேரழிவுகளையும் நெருப்பாக எரிந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் நெஞ்சுறுதிக்கு முன்னால் எதிரியின் ஆட்பலம் ஆட்டம் கண்டு ஆயுதப் பலம் நிலைகுலைந்து வெற்றி நிச்சயம் எனத் தொடக்கப்பட்ட பாதை திறக்கும் சமர் ஒன்றரை ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நகர்ந்து தோல்வி நிச்சயம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளமையை சுட்டிக்காட்டிய தமிழீழத் தேசத்தலைவர் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகள் ஈட்டிய மகத்தான வெற்றிகள் விடுதலைப்புலிகளின் போரியல் சாதனைகளுக்கு மகுடம் சூட்டியுள்ள அதேவேளையில் ஜெயசிக்குறுப் படைகளின் கிளிநொச்சிப் பயணத்திற்கு முடி[illegible] உலகுக்கு எடுத்து விளக்கியுள்ளார்.

போரினால் ஆக்கிரமித்த பகுதிகளில் அரச நிர்வாகத்தை நிறுவவும் யாழ்குடாநாட்டில் தனது கைப்பொம்மைகளான தமிழ்க்குழுக்களின் ஆதரவோடு அரச நிர்வாக ஆட்சியை நிறுவவும் சந்திரிகா கண்ட கனவும் கலைந்து வருவதைச் சுட்டிக்காட்டி எத்தனை காலமானாலும் எமத தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தில் கூட ஆக்கிரமிப்பாளர்கள் நிலைகொண்டு நிற்க விடமாட்டோம் என அவர் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அத்துடன் இராணுவத் தீர்வில் நம்பிக்கை வைத்து இராணுவத்தைப் பலப்படுத்தி அரசியற்பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு விடலாம் என்ற கனவுலகில் வாழும் சிங்களப் பேரினவாதத்துக்குள் சிறைப்பட்டுக்கிடக்கும் சந்திரிகாவின் தலைமையிலான சிறிலங்கா அரசாங்கம் தமிழர் மேல் கருணை கொண்டு தமிழர்களுக்கு நீதியும் நேர்மையும் வழங்குமென எதிர்பார்க்க முடியாது என்பதை உறுதிப்படுத்திய தமிழீழத் தேசத்தலைவர் மேதகு பிரபாகரன், ஆனாலும் சமாதான வழியில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணும் நாகரீகமான நடைமுறையை தமிழீழ விடுதலைப்புலிகள் கைவிட்டு விடவில்லை என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சிங்களத் தலைமையின் நேர்மையில் நம்பிக்கையில்லை என்பதினால் சர்வதேச சமுகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு பங்கு கொள்ளத் தயாராக இருக்கின்றோம் ஆனால் சமாதானப்பேச்சுக்கு சிறிலங்கா அரசாங்கம் விதிக்கும் முன்நிபந்தனைகளை நாம் ஏற்கத் தயாரில்லை என்பதையும் இராணுவ ஆக்கிரமிப்பும் பொருளாதார நெருக்குதல்களும் மக்களை விட்டு நீங்கிய இயல்பான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதையே தமிழர்கள் விரும்புவதால் இதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கான அரசியற் பேச்சுக்கான அடிப்படைகளை வகுப்பது பற்றியும் ஆராய்ந்து பார்க்கவும் தாம் தயாராக இருப்பதாக தமிழீழத் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் உலகிற்கு வெளிப்படுத்தினார்.

ஆனாலும் தமிழ் மக்களின் உண்மைநிலையை உலகு தெரிந்தும் மௌனமாக இருப்பதைச் சுட்டிக் காட்டி உலகு சிறிலங்காவுக்கு அளித்து வரும் உதவிகள் அதனுடைய ஆக்கிரமிப்புக்களையும் இன அழிப்புக்களையும் வேகப்படுத்தி தமிழ் மக்களுக்குப் பெரும் துன்பச் சுமையாக மாறிவருவதை விளக்கியதும் அல்லாமல் உலகு தமிழ் மக்களின் யதார்த்த நிலையை இனங்கண்டு கொள்ளும் காலம் வரும் வரை உலகின் மனச்சாட்சியைத் தட்டிக்கேட்க வேண்டிய பொறுப்பு புலம் பெயர் தமிழ் மக்களுடையதாகும் என்று புலம் பெயர் தமிழ் மக்களின் கடமையையும் நினைவுறுத்த தவறவில்லை.

இந்நிலையில் அன்புச் சகோதரமே தமிழ் மக்கள் எதனைக்கேட்கின்றார்கள்? போராட்டம் ஏன்? என்பதை யெல்லாம் தெட்டத் தெளிவாக விளக்கமாக எடுத்துக் கூறிய தேசத்தலைவர் புலம் பெயர் மக்களாகிய எமது பங்கேற்பின் அவசியத்தை ஆணித்தரமாக கேட்டுள்ளார். இதற்கு என்ன பதில் நாமளிக்கப் போகிறோம். எவ்வளவு தூரத்திற்கு எப்படி எவ்வளவு விரைவாக நாம் செயல் மூலம் பதிலளிக்கப் போகின்றோம் என்பதிலேயே எமது உயிரினும் இனிய தமிழீழத் தேசத்தினதும் மக்களினதும் விடுதலையின் விரைவு தங்கியுள்ளது.

வணக்கம்
அன்பின் ஆசிரியர்.




## உங்களால்...

ஓ
மாவீரர்களே!
எதிரியை
வேரோடு
பிடுங்கும்
ஆற்றலை
எமக்களித்து
விழிமூடினீர்...
மண்ணில் -
நீங்கள்
தகர்த்தெறிந்த
பகைவனின்
எரிகணை
வண்டி
மறைப்பில்
எங்கள்
பூனைகள்
குட்டி
போடுகின்றன.
கடலில் -
நீங்கள்
மூழ்கடித்த
எதிரியின்
போர்க்கப்பல்
உள்ளே
எங்கள்
மீன்கள்
குஞ்சு
வைக்கின்றன.
வானில் -
நாங்கள்
சுட்டுவீழ்த்தி
வயலில்
நொருங்கிக் கிடக்கும்
பகைவனின்
குண்டுவீச்சு
விண்ணூர்தி
இறக்கைகளில்
எங்கள்
குருவிகள்
குஞ்சு
பொரிக்கின்றன.

ஓ
மாவீரர்களே!
இது -
மண்ணிலும்
கடலிலும்
வானிலும்
எதிரிகளின்
உடைவுகளில்
எமது
தாயகம்
புதிது பிறக்கும்
காலம்.
இங்கேதான் -
எங்கள்
குழந்தைகளும்
பிறக்கின்றன

உணர்ச்சிக் கவிஞர்
காசிஆனந்தன்

# கண்டி வீதியைக்கட்டித்தழுவு!
# கோவிந்தன் கடைச் சந்தியில் கூத்தாடு!!

வெற்றித்திருநகரான கிளிநொச்சி
வீரத்தி லூறிய பூமியடா புலி
அற்புதங் காட்டிடப் போரிடை வீழ்ந்தது
ஆயிரமாயிரம் ஆமியடா.

கலிங்கத்துப் பரணியை
எழுதிய புலவனைக்
கைதட்டிக் கூப்பிடுங்கள் - வந்து
கிளிநொச்சிப் பரணியை
எழுதிடச் சொல்லியே
குரல் வைத்துக் கூப்பிடுங்கள்.

* * *

கிளிநொச்சி.
உழுவோர் ஏரொலியும்,
கடைவோர் மத்தொலியும்
சேர்ந்தொலிக்கும் வயலூர்.
தமிழீழத்தின் தானியக் களஞ்சியம்.
நகராகத் துடித்த பெருவூர்,
முகத்துக்களவான ஒப்பனையுடன்
மிளிர்ந்தது அதனழகு.
பட்டறையிலடுக்கிய பழையநெல் முடியுமுன்னரே
அடுத்த போகத்தரிசி அடுப்படிக்கு வந்துவிடும்.
கறவைப் பசுக்கள் சொரியும் பாலில்
வயிறுமட்டுமல்ல
முற்றத்துப் பூமரத்தின் வேர்களும் நனையும்.
இந்த வாழ்விழந்து
அந்துப்பூச்சி அறுத்தளவு அரிசி வாங்கவே
நிவாரண வரிசையில் நிற்கும் விதியென்றாச்சு நேற்று.
'சத்ஜய' எனப் பேரிட்டு வந்து
சண்டாளர் பிரித்தரிந்தச் 'சந்தனக்காட்டை'
பின்னர்
வல்லுறவுக்குள்ளான வாலைக் குமரியெனச்
சிதைவுண்டு போனதிந்தத் திருநகர்.
திசையெட்டுமோடிச் சிலும்பினர் மக்கள்.
தரிசாகிப் போயின வயல்கள்.
மண்ணின் முலையாவும் எரியுண்டு போக
சின்னக் கூடுகள் கட்டிச் சீவித்திருந்த குருவிகள்
முடபற்றைக் கிளைகளிலிருந்து மூச்சுவிட்டன.
26.09.1998 சனிக்கிழமை
நல்லூரிலுருகிய நாயகனின் நினைவுநாளன்று
சாமம் கடந்து மறுநாளைச் சந்தித்தோம்.
விடிய விடிய அருகிற் கேட்டது வெடியதிர்வு
வன்னியின் கண்கள் பின்னர் மூடவேயில்லை.
கிளிநொச்சிக்குள் பிள்ளைகள் புகுந்தாரென்பதைப்
பீரங்கி வாயின் மௌனத்திலிருந்து புரிந்து கொண்டனர்.
ஈழத் தமிழனுக்கு மட்டுமல்ல
உலகெங்கும் வாழும் தமிழனுக்கும்
முதுகில் இறக்கை முளைத்தது.
காற்றிலெழுந்து பறந்து
முகில்களை உரசி மிதந்தான்
நிலவை விருந்துக்கழைத்தான்
நட்சத்திரங்களைத் தொட்டு முத்தமிட்டான்
மறுநாள் வந்து சூரியனையும் வழிமறித்து
சுகம் கேட்டான்.
ஆனந்தக் களிப்பு அடங்காதவனாய்
'சந்திரன் பூங்கா'வில் வந்திறங்கிக்
'கண்டி வீதி' யைக் கட்டித்தழுவினான்
'கோவிந்தன் கடைச் சந்தி'யில் நின்று
கூத்தாடினான்.
'இரணைமடுக்குளத்தின்' அணைக்கட்டேறி
அருகிலுள்ள காட்டிரக் கத்தினான்.
நெஞ்சுக்குள் ஆயிரம் நீரோற்பலம் பூக்கக்
குஞ்சுப்புறாவாகிக் குதூகலித்தான்.
விடிந்தது
அன்று ஒரு நாளின் பொழுது மட்டும் விடியவில்லை
ஈழத்தமிழனின் எதிர்காலமும் சேர்ந்தே விடிந்தது
எந்தப்படையையும்
அது எவனுடையதாக இருந்தாலும்
தடுத்து நிறுத்தலாம் என்பது மட்டுமல்ல
அடித்து விரட்டலாமென்பது மட்டுமல்ல
துடைத்து அழிக்கலாமென்பதற்கும்
விழிக்குமுன்னே சாட்சியாக விரிந்தது கிளிநொச்சி
புலிகள் பூஞ்சணம் பிடித்துக் கிடக்கிறாரென்ற
வந்தேறு படைகளுக்கு வாயடைத்துப்போனது
உருத்திரபுரம் ருத்ரபுரமாகத்
திருவையாறு மேனிபுளகமெய்திப் பெருகிப் பாய்ந்தது
காளித்தாய் ஊழிக்கூத்தாடினாள்.
வேங்கைகளிடம் வீழ்ச்சி கண்டது வேறுமொரு முகாமல்ல
பலமேறிய படைத்தளம்
காற்றும் புகமுடியாதென்று
கனவிற் கிடந்து பீற்றிய
பகையின் பெருந்தளம்
ரத்வத்தவின் கச்சையே அவிழ்ந்துவிழக்
கைகளால் பொத்தியபடி
இடிந்துபோன இரண்டு கடைகளைப் பிடித்து
மாங்குளத்தில் கொடியேற்றினார் 'மானஸ்தன்'
பிரபாகரனைப் பிடிப்பேனென்ற பெருமானே வருக

## உலைக்களம்

- வியாசன்

சீமைக்குச் சென்ற சீமாட்டியே வருக
மையங்கொண்ட புயலின் முடிச்சவிழ்த்து
வீசும் வழியுரைத்த வித்தகன் யார்!
ஈயடிக்கக்கூட எழும்பாதிருந்த இனத்துக்குப்
பேயடிக்கும் பலத்தைப் பெற்றுக் கொடுத்தவன் யார்!
கிளிநொச்சி பிடித்த புலியணி நகர்வுக்கு வழிகாட்டி நடத்திய
வல்லவன் யார்?
[illegible]ப்போமென்றுரைத்த பிரபாகரன்தான்.
காலின் கொலிசிலும்
கையின் வளையலிலும்
மெய்மறந்து கிடந்த மின்னல்களின்
நாடித்துடிப்பில் நாட்டுப் பற்றூட்டியவன்
கோடிவிழி திறந்தாடினாள் கொற்றவைத்தேவி
பேயுண்டமாதிரிப்போனதும் பாசறை
கலிங்கப்போரை ஜெயம் கொண்டான் பாடியதே
கிளிநொச்சிக்கும் பொருந்து மென்றானது
எவரிடமாவது கேட்டுக்
கலிங்கத்துப்பரணியை மொழிபெயர்த்துப் படியுங்கள்
மிதித்த இடமெல்லாம் புல்லா நசிந்தது!
இல்லை பிணமே நசிந்தது
காலிடை கையும்,
கையிடை தலையும்
தாய் நிலமெல்லாம் காய்கிற பிணமும்
நீரறியாமலே நெருப்பிடை வெந்தது.
ஆயிரம் யானைகள் களத்திடை வீழ்த்தியோன்
பரணியொன்றிற்கும் பாட்டுடைத் தலைவனாம்
விதிமுறைப்படியும் சரியெனக்கொண்டால்
கிளிநொச்சிப் பரணிக்கு
பிரபாகரனே பாட்டுடைத் தலைவன்
போரினிற் கலந்த புலிமற வீரர்
பரணிக்குரிய பாட்டுடைப் பொருளர்
இன்றோ, இனி என்றோ
எவனோ ஒருவன் இதை எழுதுவான்.
இத்தமாரியுடன் முடியும் வன்னியின் நாசி
அடுத்த கோடையுடனேனும் சிக்குறுமினிப்பட

* * *

ஊர் பிடிக்க வைத்தாய் காலக்கெடு இப்போ
கன்னதும் போனதே ஊளையிடு.
நீர் நிறைக் தாடு இரணைமடு இங்கே
நீதிமுலாம் வந்து உயிரை விடு.

எட்டி நின்று வாழுகின்றாய் கொழும்பிலே கிளி
நொச்சியிப்போ எங்களது கையிலே
கட்டி வைத்த பங்கர் எங்கள் கையிலே நாங்கள்
காணப்போறோம் நாயாற்றுழி தையிலே.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive